T 1207

# பாலைவனப் பயணிகள்



கே. ஆர். டேவிட்

T/1207

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

20/6/89

S. BALASUNTHARAM. B.A. (Hons)
NO. 20. CROSSETTE LANE.
CHUNDIKULI.
JAFFNA.

# பாலைவனப் பயணிகள்

கே. ஆர். டேவிட்

ராஜன் புத்தகசாலை
12 பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்



மீரா வெளியீடு - 6

யாழ்ப்பாணம் -- இலங்கை

△ முதற் பதிப்பு : ஆனி 1989

△ பதிப்பாளர் : டேவிட் லிகோரி

△ ஓவியம் : லங்கா

△ அச்சிட்டோர் : மெர்குரி அச்சகம்

△ அட்டை : கொழும்பு ஸ்ரூடியோ / மெர்குரி அச்சகம்

⊙ PALAIVANAP PAJANIGAL *A Novel in Tamil by K. R. David*

⊙ **First Edition:** *June 1989*

⊙ **Published by:** *David Ligory Pathipalayam*
*38, Vembadi Veethy, Jaffna.*

⊙ **Printed by :** *Mercury Printers*
*40/1. Navalar Road, Jaffna.*

⊙ **Cover :** *Lanka / Colombo Studio*

**Price : 10/-**

விபரங்களுக்கு :

டேவிட் லிகோரி பதிப்பாலயம்

38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

# எனது உரை

ஜீரணித்துப்போன மனிதர்களின் சிந்தனை மேடுகளே. ஜனனிக்கின்ற புதிய மனிதர்களின் வளர்ச்சிக்கு அடிநாதமாக அமைகின்றன.

'சமுதாயத்தை உருவாக்குபவன் மனிதன். சமுதாயத்தால் உருவாக்கப்படுபவன் மனிதன்' என்று சுருங்கக் கூறி விளங்கிக் கொள்ளலாம்.

இக் குறுநாவலின் நாயகன் உக்குள் என்ற வாலிபன், இவன் சமுதாயக்கரங்களால் செதுக்கப்பட்டவன், மிகவும் கெட்டவன்.

சமுதாயக் கண்களோ இவனிடம் நீதியை தேடுகின்றது.

முடிவு......

சமுதாயக் கால்களால் உதைக்கப்படுகின்றான்! ...தண்டனைக்குள்ளாகுகின்றான்.

மேடுபள்ளமிக்க சமுதாயம்.

நபுஞ்சகத்தன்மைமிக்க சட்டம்.

இரண்டுக்கும் நடுவே அப்பாவி மனிதர்கள்!

சமுதாய மேடுபள்ளங்களைச் சமப்படுத்தாதவரை உக்குளைப் போன்றவர்கள் பாலைவனப் பயணிகள் தான்!

இக்குறுநாவலை எழுதத் தூண்டியவர் எனது பக்திக்குரிய திரு. சிவஞானசுந்தரம் அவர்கள்.

இக்குறுநாவல் நூலுருப்பெற உழைத்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்,

பிடாரிகோவில் வீதி,

ஆனைக்கோட்டை,
01 03-1989.

அன்புடன்
கே. ஆர். டேவிட்

சிரித்திரன் சுந்தர் அவர்களின்

# முன்னுரை

மனிதனைச் சிந்திக்கத் தெரிந்த பிராணி என அறிவியலாளர் கூறுகின்றனர் மனிதம் முழுமையாக மலராததால் போலும் பிராணியை இணைத்து சிந்திக்க தெரிந்த பிராணி என்று மனிதனை இன்றும் அழைக்கின்றார்கள். சிந்தனையால் சந்திரனைத் தொட்டுவிட்டான். ஆனால் சிந்தனையால் அயலவன் இதயத்தை தொட வில்லை சிந்தனையில் நூல்கள் பூக்கின்றன. ஆனால் நூல் நிலையங்களையும் நீறு பூக்க வைக்கின்றான்.

இந்தச் சிந்தனைச் சிற்பியின் மனதில் தான் மதமுப் பிறந்தது. அன்பே சிவம் அயலவனை நேசி அகிம்சை என்று ஆலாபனம் பண்ணுகின்றான் உலகில் அன்பைக் காணவில்லை அன்பு அகராதியில் அனந்த சயனத்தில் ஆழ்ந்திருக்கின்றது.

இந்தச் சூழலில் எமது மதிநுட்பம் நூல்களையும் எழுதத்தான் செய்கின்றது பாலைவனத்திலும் சுனை தோன்றத்தான் செய்யும் சுனை பாலைவனப் பயணியின் தாகத்தை தீர்க்கலாம்.

டேவிட் அவர்கள் சமூக வெப்பத்தால் ஏற்பட்ட கொப்புளக் குமுறல்களையே குறுநாவலாகத் தந்திருக்கின்றார் அவரின் மன அழுத்தங்களே அவரின் ஆக்கங்கள் அவர் பார்வையாளராக இருந்து கதை படைப்பதில்லை பங்காளியாக இருந்தே கதைபடைப்பவர்.

டேவிட் அவர்களின் பாத்திரங்கள் தந்தக் கோபுரத்தில் வார்த்தெடுத்த வார்ப்புகளல்ல சதையும் தோலுமாக சமூக சுகம் காணு அபலைகள் எனது பக்கத்து வீட்டொருவனை பார்க்கும் போது அவர் படைப்பாகிய ' உக்குள் ' பாத்திரம் கண் முன் நிற்கின்றான் என்னும் பிரமை ஏற்படும்.

கலைகலைக்காக என்பது அவருக்கு பிடிக்காத வாதம் கலை உலைக்காக என்பது அவர் கதைகளின் ஜீவநாதம் சமஸ்கிருத மொழியில் பசியை உதிராக்கினி எனக் கூறப்படுகிறது சிங்களத்தில் படகினி எனக் கூறப்படுகின்றது இந்தப் பசித்தீயை அணைக்கும் படையலே அவர் படைப்புகள்.

உன்னிடம் பணம் இருந்தால் முதல் ரொட்டி வாங்கு மீதிப்பணமிருந்தால் ஒரு ரோஜாமலர் வாங்கு என்பது ஞானியின் பொன்மொழி இந்தப் பொன்மொழி டேவிட் அவர்களின் படைப்புகளுக்கு போர்த்தும் பொன்னாடையாக அமைகிறது.

*150, காங்கேசன்துறை வீதி,* சி. சிவஞானசுந்தரம்
*யாழ்ப்பாணம்.*

# பதிப்புரை

இனியவர்களே! வணக்கம்

யாழ்ப்பாணத்தில் புத்தகத் தொழில் அப்படியே சிலையாக நின்றுகொண்டிருக்கிறது. புத்தகத் தொழில் வளராமல் தேங்கிவிட்டால், எழுத்தாளர்களின் படைப்புகளும் தூங்கிவிடும். புதிய படைப்புகள் இல்லை என்றால் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியே தடைப்பட்டுவிடும்.

எழுதுகிற தொழிலை எப்போதும் போற்றுவேன். குடியானவன் நிலத்தில் எழுதுகிறான். கடலோடி நீரில் எழுதுகிறான். இருந்தும் அவர்களது உழைப்பிற்கில்லாத மரியாதை அவர்களை எடுத்துக்காட்டுகிற எழுத்தாளனுக்கு வந்துவிடுகிறது.

எழுதியதைப் படிக்கும் பொழுதும் படித்ததை புத்தகமாக வெளியிடும் பொழுதும், எழுத்துக்கு அப்பால் எண்ணங்களை சுமந்துபோக முடிகிறது.

யாழ்பாணத்தில் புத்தகத் தொழில் முழுக்க முழுக்க வாசகர்களையே நம்பியிருக்கிறது. புத்தகம் வாங்குவது அவசியமில்லை என்று வாசகர்கள் முடிவிற்கு வந்துவிடவில்லை.

விழுந்து கொண்டிருக்கிற வாசகர்கள் எண்ணிக்கையை விழாமல் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல் புதியவர்களிடத்திலும் புத்தகம் படிக்கிற பழக்கத்தை உண்டாக்க வேண்டும்.

மக்களிடையே படிக்கிற பழக்கத்தை இலக்கியக் கூட்டங்கள், புத்தக விமர்சனங்கள், கவியரங்கங்கள், பரிசுப் போட்டிகள் புத்தகக் கண்காட்சிகள், மூலமாக வளர்க்க வேண்டும்.

பிறந்ததில் இருந்து ஒரு குழந்தை படுத்து, புரண்டு, குப்புற விழுந்து, நெத்தியில் அடிபட்டு, சுவரைப்பிடித்து எழுந்து, இரண்டு கைகளையும் விட்டுவிட்டு, எந்தப் பிடிப்புமே இல்லாமல் சுத்தியிருக்கிறவர்களை மிரண்டு மிரண்டு பார்க்குமே... அந்த மாதிரியான நிலையில்தான் மீரா வெளியீடுகளும் இருக்கிறது.

எனவே வாசகர்களே! உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்த நாள் விசேட தினங்களில், கல்லூரி அதிபர்களே! ஆசிரியப் பெருந்தகைகளே! உங்கள் பாடசாலைப் பரிசளிப்பு வைபவங்களில் நம் நாட்டின் மண்மணமும், பண்பாட்டு வளவும் நிறைந்த நாவல்களான மீரா வெளியீடுகளை வாங்கி பரிசளியுங்கள். இதனுல் ஈழத்து இலக்கியம் வளர நீங்களும் உங்கள் பங்களிப்பை செய்தவராகின்றீர்கள்.

"வரப்புயர கோல் உயரும்" என்றபடி புத்தகத் தொழில் வாழ்ந்தால்தான் தமிழ் இலக்கியம் வளர்ச்சி அடையும்.

மீரா உயர்ந்தால் ஈழத்து இலக்கியம் உயரும்.

அன்போடு...
டி. லிகோரி

5-5-1989.

# 1

" உக்கிள் "

இப்படித்தான் அவனை எல்லோரும் அழைக்கின்றனர். 'பூரணன்' என்ற அவனது சொந்தப் பெயரை இங்குள்ள ஒரு சிலர் மட்டுந்தான் அறிவார்கள். அவர்களும் அவனை 'உக்குள்' என்றுதான் அழைப்பார்கள்!

இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும், பாடசாலை மண்டபத் திண்ணையில் உக்குள் படுத்திருக்கிறான். அவனுக்குப் பக்கத்தில் சுந்தரம் அவனைப்பெற்றவன் சுவரில் சாய்ந்தபடி அமர்ந்திருக்கிறான்.

உக்குள் மரியாம்பிள்ளையை அடிப்பானென்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

நடந்துவிட்ட சம்பவத்தில் உக்குளின் பக்கம் நியாயமிருப்பதைச் சுந்தரம் உணர்கிறான், ஆனால் அவனது ஏழ்மை அவனைப் பயப்பிடவைக்கின்றது.

அவன் உக்குள் நடந்துவிட்ட இந்த அடிபிடிச் சம்ப வத்தையிட்டு பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை!

இக்கிராமத்தில் வறுமைக்கு இலக்கணமானவர்கள் இவர்கள். இவர்களை யாருமே மதித்துக்கொள்வதில்லை ஆனால் உக்குள் 'கெட்டவன்' என்ற காரணத்தால் யாருமே அவர்களுடன் முட்டிக் கொள்வதில்லை.

மரியாம்பிள்ளை இக்கிராமத்தில் மிகவும் வசதி படைத் தவர் அதனால் உக்குளிடம் அடிபட்டுக் கொண்டதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள மாட்டாரென்பதைச் சுந்தரம் அறிவான்.

உக்குளும் அறிவான்.

சட்டத்தோடு பல தடவைகள் பழகிய அனுபவச் சுவடு -- அதனால்த்தான் இங்கு வந்து ஒழித்திருக்கின்றனர்.

நிட்சயமாக ஜீப் வரும் !

வந்தால்?...... அனுபவங்கள் சாவதில்லையே !?

"என்ன இருந்தாலும் உக்குள் நீ மரியாம்பிள்ளையை கை நீட்டி அடிச்சிருக்கக்கூடாது." சுந்தரம்

"ஏன்..."

"அவங்கள் பணக்காரர், படிச்சவங்கள், சொந்தபந்தம் உள்ளவர்கள்... அவங்களோடை முட்டிக்கொள்ளுறது எங் களுக்குத்தான் ஆபத்து..."

"மரியாம்பிள்ளை ஒரு நஞ்சன்... அவனைக்கொலை செய் திருந்தால்கூட பாவமில்லை... எப்படியெல்லாம் ஆசைகாட்டி என்னை மோசஞ்செய்தானெண்டதை இப்பதான் நான் உணர்றன்" உக்குள் ஆத்திரப்படுகின்றான்.

சில மணித்தியாலங்களுக்கு முன்புதான் அந்தச் சம்ப வம் நடந்தது.

இன்று முழுவதுமே உக்குளுக்கும் சுந்தரத்துக்கும் சாப்பாடில்லை. மத்தியானம் உக்குள் இரண்டு இளனிக்குரும்பைகள் கொண்டுவந்து வெட்டினுன் இருவரும் குடித்தனர்.

உக்குள் தனக்கு தெரிந்த இடமெல்லாம் சென்று வந்துவிட்டான் சகலருமே கை விரித்து விட்டனர்.

உக்குளை இக்கிராமத்தில் யாருமே நம்பமாட்டார்கள். அவனைப்பற்றி இன்று நேற்றல்ல அவனது பிறப்பிலிருந்தே சகலருக்கும் தெரியும்.

மிகவும் கெட்டவன்—

"தன்னை ஒருவரும் நம்பவில்லையே என்ற மனவிரக்தியோடு வீட்டுக்கு வந்தான். இரவு ஏழுமணி—

"தம்பி... மரியாம்பிள்ளையின்ரை கடையிலே போய் ஒரு றுத்தல் பாண் கடனாய் வாங்கிக்கொண்டு வா..." சுந்தரம் கூறினுன்.

உக்குள் எழுந்து நடந்தான் மரியாம்பிள்ளையின் கடை 'மேரி ஸ்ரோர்' பெயர்பலகை மின்சாரபல்பின் ஒளிக்கீற்றில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. மரியாம்பிள்ளை பட்டாடையில் அமர்ந்திருக்கிறுர்.

"என்னவேணும்.." சாமான் கொடுப்பவன் கேட்கிறுன்.

"ஒரு றுத்தல் பாண், காக்கிலோ சீனி, ஒரு தேயிலைப் பைக்கற்.." உக்குள் கூறுகிறுன்.

பொருட்கள் கட்டப்பட்டு மரியாம்பிள்ளையின் மேசைக்கு போகின்றது மரியாம்பிள்ளை கணக்குப்போட்டு கூட்டித் தொகையைக் கூறுகின்றுர்.

"முதலாளி காசு நாளைக்குத் தெரலாம்..." உக்குள் கூறுகிறுன்.

" சாமான்களை எடுத்து உள்ளே வை " மரியாம்பிள்ளை சாமான் கொடுப்பவனுக்குக் கூறுகின்றார். அவன் கட்டப் பட்டு மேசையில் கிடந்த பார்சலை எடுத்துச் செல்கிறான் ?

முன்பென்றால். உக்குள் அந்தக் கடைக்குள் ஒரு பிரளயமே நடத்தி முடித்திருப்பான்... ஆனால் இப்போது... அவனது அடிமனத்தில் தளிர்விட்டிருக்கும் ஏதோ ஒரு வித உணர்வு அவனைத் தடுக்கிறது...... மெதுவாக அங்கிருந்து நகர்ந்து ரோட்டில் மிதந்து ஓரமாக நிற்கின்றான்.

பட்டடையில் இருக்கும் மரியாம்பிள்ளை அடிக்கடி உக்குளைப் பார்த்துக் கொள்கிறார்.

" உக்குள் உன்னை இந்த கிராமமே வெறுக்கிறது... நீ உன்னை அடக்கி, நல்லது கெட்டதைத் தெரிந்து செய்யப் பழகிக்கொள் நாளடைவில் இந்த கிராமமென்ன ... இந்த உலகமே உன்னை ஏற்றுக் கொள்ளும்... " அன்ரனிமாஸ்டர் அடிக்கடி இதைத்தான் அவனுக்குக் கூறுவார்.

அதை நினைத்துக் கொள்கிறான்,

நின்றவன் மெதுவாகத் திரும்பவும் முதலாளிக்குக் கிட்ட வருகிறான்.

" முதலாளி .. "
" என்ன... "

" என்னிலே நம்பிக்கையில்லையா .. "

" உக்குள் நிண்டு என்னை வேலையைப் பழுதாக்காமல் போ... "

" உங்களாலே என்ரை வாழ்க்கையே பழுதாய் போச்சு... அது உங்களுக்குத் தெரியுமா... "

" போடா வெளியாலே .. "

உக்குள் சகலதையும் மறந்துவிட்டான். வழமையான கை, கால் வீச்சு ..

சில போத்தல்களும் உடைந்து, மரியாம்பிள்ளையின் முன்பல்லு இரண்டும் உடைந்து .. வாயால் இரத்தம் பீறிடுகிறது.

உக்குள் வெளியேறிவிட்டான்.

சந்தியில் நடந்த சம்பவம், அதிலும் இப்பகுதிபிரமுகர் சம்பந்தப்பட்டது. ஒரே நிமிடத்தில் ஊரெல்லாம் பரவி விட்டது.

வீட்டுக்கு வந்த உக்குள் சுந்தரத்திற்கு விஷயத்தை கூறி விட்டு இனிமேலும் குடிசையில் இருப்பது ஆபத்து. என் பதை உணர்ந்துகொண்டனர். எங்கே போவது.

உக்குளை ஆதரிக்க யார் இருக்கிறார்கள் அதிலும் மரி யாம்பிள்ளைக்கு எதிராக நிற்கும் உக்குளை யார் ஆதரிப் பார்கள்?

"உக்குள் இப்பஎன்ன செய்யிறது. எங்கை போறது இருவரும் புறப்பட்டுப் பாடசாலைக்கு வந்துவிட்டனர்.

"உக்குள் நீ எனி என்ன செய்யப் போறாய் முதலாளி உன்னை விடமாட்டார்... எத்தனை நாளைக்கென்று தான் தலைமறைவாய் திரியுறது ..." உக்குளை இந்த உலகமே ஒதுக்கினாலும், சுந்தரத்தால் ஒதுக்கிவிட முடியுமா? பெற்ற வனல்லவா ?

"புடிச்சால் அடிப்பாங்கள் அடிக்கட்டன் இந்தக் கிராமத்திலை உள்ளவை எல்லாரிட்டையும் சூட்டுப்பட்டு வளர்ந்த உடம்புதானே .." உக்குள் மிகவும் வேதனையோடு கூறுகிறான்.

சுந்தரம் அழுகிறான்.

"ஐயா நீ ஏன் அழுகிறாய். நான் உன்னிலை கோபப் படயில்லை நீ என்ன செய்வாய்.. பிறப்பிலை வறுமை... அதிலையும் ஒரு காலில்லை..'' உக்குளின் தகப்பன் ஒற்றைக் காலை ஊன்றி மறுகாலுக்குப்பதிலாக ஊன்றுகோலை ஊன்றியே நடக்கிறான். அவனது இடதுகால் முளங்காலோடு அஸ்தானமாகிக் கிடக்கின்றது..

மிகவும் பரிதாபத்திற்குரியவன்.

"ஊரிலை எந்தக் கெட்டகாரியம் நடந்தாலும் உன்னைத் தானே சொல்லுகினம்... நீ ஏன் இப்பிடி நடக்கிறாய்...

"ஐயா வேறை ஆரும் இந்தக் கேள்வியைக் கேட்டாலும் பரவாயில்லை.. நீ இந்தக் கேள்வியை கேக்கிறியே...

என்ரை கடந்தகால வாழ்க்கையைப் பற்றி கொஞ்சம் யோசிச்சுப்பார்...

... என்னென்ன கெட்ட காரியங்கள் இருக்கோ... அதுகளைத்தான் நான் கற்றுக் கொண்டன்...

நிலா வெளிச் சந்தித் தேத்தண்ணிக் கடையிலை சுடுதண்ணி வாங்கி கற்கண்டு கரைச்சு எனக்குப் பருகிப் போட்டு தேத்தண்ணிக் கடை விறாந்தையிலை என்னைக் கிடத்தி நீயும் படுத்துக்கிடந்தியே.. அப்பவே வெக்கம் ரோசத்தை நான் இழந்திட்டன்.. இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் எண்டு யோசிக்கிறாயா.. அந்தக் கடைக்காரன் தான் எனக்குச் சொன்னான்.''

சுந்தரம் அழுகை ஓயவில்லை—

"ஐயா நீ ஏன் அழுகிறாய்—

— பிள்ளையை நல்லவனாக வளர்க்கிறது பெற்றவர்கள் தான் — நீதான் என்னை வளர்த்திருக்கவேணும் ஆனால் உன்னாலை முடியாமல் போச்சு —

— இந்தக் கிராமத்துக்கே ஒரு பொதுவான வேலைக்காரனாகத்தானே நான் இருந்தன் —

— என்ரை வயிற்றுப் பசியைப் போக்குறதுக்காக நீ சிலதுகளைச் செய்தாய் — உன்னையே பார்த்துக்கொண்டு நிண்ட நானும் அதுகளைச் செய்தன். ஏன் செய்யிறன் எண்டு புரிஞ்சுகொள்ளாமல்த்தான் செய்தன் —" உக்குள் மிகவும் அமைதியாகக் கூறுகின்றான்.

சுந்தரத்தால் பேசமுடியவில்லை.

"என்னை நான் உணராத வயதிலை நான் தேடிக் கொள்ளாமலே சில அனுபவங்கள் என்ரைமனதிலை படிஞ்சு போச்சு — தனியாக நான் நடமாடத்துவங்கிய காலத்தில் நான் கற்றுக் கொண்ட அனுபவங்களை விருத்தி செய்து கொண்டன் — அப்பகூட அதிலை உள்ள நன்மை தீமைகள் எனக்குப் புரியயில்லை — இப்பதான் நான் என்னை உணர்றன். ஆனால் இப்ப நான் கெட்டவன் — நான்செய்தாலென்ன, செய்யாமல் விட்டாலென்ன சகல கெட்டகாரியங்களுக்கும் என்னைத்தான் காரணமாய்ச் சொல்லுகினம் — நான் என்ன செய்யிறது —

— இந்தக் கிராமத்துக்குள்ளையே நான் சகல கெட்ட காரியங்களையும் பழகினனான் —இப்ப இந்தக் கிராமமே என்னைக் கெட்டவன் எண்டு ஒதுக்கித் தள்ளிக் கொண்டிருக்கு — அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் நிதானமாகவே வெளிவருகின்றன.

முன்பெல்லாம் உக்குளி இவ்வளவு நிதானமாகப் பேச மாட்டான். கடந்த ஒரு வருட காலத்துள் அவன் எவ்வளவோ மாறிவிட்டான்; தனது கடந்த காலத்தில் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களையே அடிக்கடி நினைத்துக் கொள்கிறான்,

சமுதாயத்தைப்பற்றியும், தன்னைப் பற்றியும் சிந்திக்கின்றான்.

இந்த மாற்றத்துக்கெல்லாம் அன்ரனி மாஸ்டர் தான் காரணமென்பதை சுந்தரம் அறிவான்.

பாடசாலையிலிருந்து சுந்தரத்தின் குடிசை முந்நூறு யார் இருக்கும், இங்கிருந்து பார்த்தால் ஓரளவு நடப்பவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

ஜீப் ஒன்று வந்து சுந்தரத்தின் குடிசை வாசலில் நிற்பதும், வந்தவர்கள் சிற்றடித்து உள்ளே செல்வதும், ஏமாற்றத்துடன் திரும்பி வந்து ஜீப்பில் ஏறிச் செல்வதும் தெளிவாகத் தெரிகின்றது.

" தம்பி — நீ ஒருக்கா அன்ரனி மாஸ்ரரிட்டைப் போட்டுவா — அவர் ஏதாவது உதவி செய்வார் —" சுந்தரம் கூறுகின்றான்.

" நான் எப்பிடி அவற்றை முகத்திலை முளிக்கிறது –" இந்தக் கிராமத்தில் உக்குள் மதிக்கின்ற அன்ரனி மாஸ்டர் பலதடவைகள் குற்றவாளியாக அவர்முன் சென்றிருக்கிறான் ஆனால் இப்போது—

தளிர்விட்டிருக்கும் மனித உணர்வுகளின் இயக்கம் அவனைத் தடுக்கின்றது.

இருந்தாலும் அன்ரனி மாஸ்டரிடம் போவதென்று தீர்மானித்துக் கொள்கின்றான்

இரவு தொடங்குகின்றது.

## 2

கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்குமுன் நிலாவெளிக் கிராமத்தில் காணியற்றவர்களுக்கு அரை ஏக்கர் காணி

இலவசமாக வழங்கப்பட்டது அப்போதுதான் சுந்தரம் குடும் பத்தினருக்கு அரை ஏக்கர் காணி இலவசமாக வழங்கப் பட்டது. அப்போதுதான் சுந்தரம் குடும்பத்தினரும் அரை ஏக்கர் காணிக்குச் சொந்தக்காரராயினர்.

அப்போது சுந்தரம் திருமணம் செய்து கொள்ளவில்லை துடியாட்டமான வாலிபனாக இருந்தான்.

சுந்தரத்தின் தகப்பன் என்றோ காலமாகி விட்டான். சுந்தரம் அவனது தாயுடனேயே வளர்ந்து வந்தான்.

நிலாவெளி அந்தோனியார் தேவாலயத்தின் முன்பாக செல்கின்ற கல்லுரோட்டு, கிட்டத்தட்ட அரை மைலுக்குத் தொடர்ச்சியான வீடுகள் அதன் எல்லையில் சிறிய குடிசை யொன்று அதுதான் சுந்தரத்தின் வீடு.

அப்போது, பக்கத்துவீட்டில் நீண்டநாட்களாக வேலைக் காரியாக இருந்துவந்த பூரணத்தைக் கண்டு.. காதல் கொண்டு...

இருவருமே 'பஞ்சப்பட்டவர்கள்' என்ற ஒரே பொருத் தச் சிறப்பில்- 'சோறு போடும்' வைபவத்தோடு- திரு மணம் நடந்தது-

சுந்தரமும் - பூரணமும் கணவன் மனைவியாகினர்.

சிரட்டையில் சோறு கறி சமைத்து விளையாடும் சிறு வர்களின் விளையாட்டுப் போல், நகர்ந்து கொண்டிருந்த வாழ்க்கையில் சுந்தரம் முதலில்தன் தாயை இழந்தான்.

அதன் பின்பு-

கட்டிட வேலைக்குப் போன இடத்தில் தவறிவிழுந்து இடது கால் முறிந்து... நொண்டியானான்!

இறக்கைகள் வெட்டப்பட்ட கிளி...

சுந்தரத்தின் மனைவி பூரணம் கூலி வேலைக்குச் செல்வாள்.

சுந்தரம் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். சுமை தாங்கியாய் இருக்க வேண்டியவனே - சுமையாய்க் கிடந்தான்!...

எத்தனை நாட்களுக்குத்தான் அப்படிக்கிடக்க முடியும் ?

வெட்டப் பட்ட ஆமையின் ஈரல் துடிப்பதுபோல், ஊனமாகி விட்ட அவனது டதுகால் முனைப்பிலுள்ள சதைக் குவியல் துடிக்கின்ற துடிப்பைப் பார்த்து பூரணம் அழுவாள்.

- சுந்தரமும் அழுவான்.

அவர்களது குடிசைக்குள் துன்பம் நிறைந்து தளம்பியது!

அன்ரனி மாஸ்டர் மட்டும் இடையிடையே வந்து சுகம் விசாரித்து... ஏதாவது உதவி செய்வார்.

கண்ணீரில் மிதந்த அவர்களின் வாழ்க்கைப் படகு, அவர்களின் பெருமூச்சின் உந்தலால் சிறுகச்சிறுக நகர்ந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் சுந்தரம் ஒரு புதிய தொழிலைக் கண்டு கொண்டான்,

இலங்கையிலுள்ள மிகப் பிரபல்யமான உல்லாசப் பிரயாணிகள் விடுதிகளில் இரண்டு நிலாவெளிக் கடற்கரையில் அமைந்துள்ளன. அதனால் பின்னேரம் நான்கு மணிக்குப் பிறகு நிலாவெளிக் கடற்கரையில் உல்லாசப் பிரயாணிகள் நிரம்பி வழிவார்கள்.

ஒருநாள்.

வீட்டில் அடைபட்டுக்கிடக்க முடியாமல் ஊன்று கோலின் உதவியுடன் சுந்தரம் கடற்கரைக்கு வந்தான்.

முகத்திலே விரக்தியின் வலைப்பின்னல் அதற்கு மெருகூட்டுகின்ற தாடி மீசை... நீண்டு வளர்ந்து காதுகளையும் மறைத்து எண்ணை தண்ணீயின்றி முறுக்கேறிப் போயிருக்கும் தலைமயிர் காற்றற்ற பலூனுக்குள் செலுத்தப்பட்டு குத்திநிற்கும் தடியைப்போல உட்தோலைக் குத்தி நிற்கும் எலும்புகள் .. வெள்ள நிவாரணத்தின் போது கொடுக்கப் பட்ட மிகப்பெரிய களிசான் .. இவைகளுக்கு மேலால் இறைச்சிக் கடையில் இறைச்சி தொங்குவதைப் போல இவனது இடதுகால் மூலையில் தொங்குகின்ற தசை ... நடக்கும்போது அதன் துடிப்பு ..

பரிதாபத்துக் குரியவர்களே பரிதாபப்பட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கின்ற பரிதாப கோலம்...

இவனைக் கண்ட ஒரு உல்லாசப் பிரயாணி இவன் மீது இரக்கங்கொண்டு பத்துரூபா கொடுத்தான்'

அதுதான் முதற் சம்பவம் —

மறுநாளும் —

அதற்கு மறுநாளும் —

சுந்தரம் தினசரி வந்தான் —

அவனது கைகள் நீளத் தொடங்கின!...?

"பிச்சை" !

பூரணமும் இதை அறிவாள்

'பிச்சை'த் தொழிலோடு இன்னொன்றையும் அவன் கற்றுக் கொண்டான்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகின்ற உல்லாசப் பிரயாணிகளுக்கு இங்குள்ள இயற்கைப் பொருட்களில் அதிக விருப்பம்...

சங்கு, சிப்பியில் செய்யப்பட்ட மாலை தசை எடுக்கப் பட்ட ஆமை ஓட்டுக்கோது, அன்னுசிப்பழம், மாம்பழம், வாழைப்பழம், இளனி.... என்பன.

கடற்கரைக்குச் செல்லும்போது. இவைகளில் சிலவற்றை யும் கொண்டு செல்வான்.

இலக்கண வாடையற்ற ஆங்கிலப் பேச்சைக் கற்றதோடு சரளமாகப் பொய்பேசவும் கற்றுக்கொண்டான்.

...எனக்குப் பத்துப்பிள்ளை...

தாய் தகப்பன் வருத்தக்காறர்

மனைவி குருடு...

சாப்பிட்டுப் பத்துநாள்...

இப்படி யெல்லாம் உல்லாசப் பிரயாணிகளிடம் கூறு வான், இதில் அரைப்பங்கு ஆங்கிலத்திலும், அரைப்பங்கு கைப்பாவனையிலும் அமைந்திருக்கும். எப்படியோ விஷ யத்தை விளக்கிவிடுவான்

பிச்சைக்காரனுகவும், வியாபாரியாகவும்...

நகர்ந்த அவன் வாழ்க்கை—

பூரணம் கருத்தரித்து. உக்குனேப் பிரசவித்தாள்.

திருகோணமலை ஆஸ்பத்திரியில் பூரணத்தை பிரசவத் துக்காக விட்டு, விறுந்தயில் காத்திருந்தான்.

நேர்ஸ் குழந்தையோடு வந்தாள் —

ஆண் குழந்தை –

தகப் ைைவிட்ட அந்தப் பூரிப்பில் குழந்தையை வாங்கி விட எழும்பி இருகைகளையும் நீட்டி ஊன்றிகோல் தவறி விட நிலத்தில் விழுந்து .

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

ஒற்றைக் காலற்ற 'அரைகுறை' மடியில் குழந்தையை வைத்து .. அதன் பிஞ்சுக்கைகளை தன் மூக்கோடு சேர்த்து ..

எத்தனையோ பிறப்புகளைக் கண்டு பழக்கப்பட்ட அந்த நேர்ஸ் இந்தக் காட்சியின் உள்ளடக்க வேதனையை உணர்ந்து .. கண்கலங்கி நின்றாள்... அவளது வேதனைக்கு இந்தக் காட்சிமட்டுந்தான் காரணமல்ல ..

"அண்ணை" ஏதோவொரு உணர்வில், சுந்தரத்தைத் தனது சகோதரனாக்கி-நேர்ஸ் 'அண்ணை' என்று அழைக்கிறாள்.

"என்னங்கம்மா .. "

"உங்களோடை வேறை ஆரும் வந்தாங்களா..."

"வேறை ஆர் இருக்கினம் வாறதுக்கு .."

"அண்ணை..."

"என்னங்கம்மா .."

"உங்கடை மனைவி பூரணம்" அவளால் பேச்சை முடிக்க முடியவில்லை.

"என்ன சொல்லுறா அவளுக்கு ஆம்புளைப்புள்ளை தான் வேணுமெண்டு சொல்லிக்கொண்டிருந்தவ அவள் சொன்னது மாதிரியே நடந்திட்டிது..."

"அண்ணை .. உங்கடை மனைவி பூரணத்துக்குக் கொஞ்சு உடம்பு சரியில்லை .."

"என்ன .."

"பூரணத்தை நீங்க விட்டை கொண்டுபோறதுக்கு ஏற்பாடு செய்யுங்கோ "

"என்னம்மா சொல்றீங்க..."

"...பூரணம் செத்திட்டா!...

சுந்தரத்தின் உடல் இயக்கங்கள் சில வினாடிகள் நின்று... சிறுகச் சிறுக இயங்க ஆரம்பிக்கின்றது...

தனித்து நிற்கும் வல்லமையற்றவன், குழந்தையும் கொண்டு பூரணத்தின் உடலையும் கொண்டு செல்ல முடியுமா?...

குழந்தையை நேர்ஸ்சிடம் கொடுத்துவிட்டு ஊன்று கோலை ஊன்றி பூரணத்தின் கட்டிலடிக்குச் செல்கின்றான்...

"பூரணம்... எனக்கொரு சுமைதாங்கியாக இருந்த நீ— என்னைச் சுமைதாங்கியாக்கிப் போட்டுப் போட்டியே... நான் எப்பிடிச் சுமக்கப் போறன்..." சுந்தரத்தின் வெதும்பல் ஒலி, பூரணத்தைவிட, அங்குநின்ற அனைவரது இதயங்களிலும் இரத்தம் கொட்ட வைக்கின்றது.

அன்ரனி மாஸ்ரருக்குச் செய்தி எட்டி, அவர்வந்து சுந்தரத்தையும். குழந்தையையும் பூரணத்தையும் வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

பூரணத்தின் உடலைத்தகனஞ் செய்வதற்காக அன்ரனி மாஸ்ரரே ஊரவர்களிடம் காசு சேர்த்து நடத்தி முடித்தார்.

இறந்துபோன தனது மனைவியின் ஞாபகமாகத் தனது குழந்தைக்கு

"பூரணன்" என்னும் பெயரைத்தான் சுந்தரம் வைத்தான்—

'பூரணனை' 'பூரணம்' என்றுதான் சுந்தரம் அழைப்பான். ஐந்து வயதுவரை அப்படித்தான் அழைத்தான். அதன்பின்பு பூரணன் சுதந்திரமாக நடமாடத் தொடங்கிய பின்பே.

'உக்குன்' என்னும் பெயரைப் பெற்றான். இந்தப் பெயரை 'மேரி ஸ்ரோர்' முதலாளி மரியாம்பிள்ளை அவர்

களால்த்தான் சூட்டப்பட்டதாக கிராமத்தவர்கள் கூறிக் கொள்கின்றனர்.

'உக்குள்'

இந்தப் பெயர் ஏன் வைக்கப்பட்டது... அல்லது இந்தப் பெயரின் கருத்து -

ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

இப்போது பூரணன் என்ற பெயர். பிறப்புச் சாட்சிப் பத்திரத்தோடு மட்டும் ஒட்டிக்கிடக்க 'உக்குள்' என்ற பெயரே வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைப்படி ஏறியிருந்தால் பூரணன் என்ற பெயர் பயிற்றப்பட்டிருக்கும், பாடசாலை படி ஏறவேண்டிய வயதில், தொட்டாட்டு வேலைக்காரனுக மரியாம்பிள்ளை வீட்டுப் படியில் ஏற்றப்பட்டு விட்டான்!

இறகொடிந்த பறவையால் தன் குஞ்சுக்கு இரைதேட முடியுமா?

நாட்களைப் பின்தள்ளி, முன்னேக்கி நகர்கின்ற காலத்தின் சுழற்சியாவது ஒய்ந்திருந்தால் பூரணன் உக்குளாகாமல் குழந்தையாய் நல்லவனுய் இருந்திருப்பான்!

ஆனுல், காலம்?...

நகர்ந்து கொண்டிருந்தது!

## 3

"தம்பி.. நீ அன்ரனி மாஸ்ரரிட்டை போகயில்லையா..." சுந்தரம் திரும்பவும் கேட்கிருன்.

"போகப் போறன்.."

"நேரம் போகுது .. மாஸ்ரர் படுக்கப் போறதுக்கு முந்திப் போவன்..."

".. ஐயா... நீ வீட்டை போகாதை... இஞ்சை படுத்திரு... நான் போட்டுவாறன் .."

"ரோட்டாலை போகாதை - ஒழுங்கையாலை போ... அது தான் நல்லது .."

உக்ரூள் புறப்படுகிறுன்—

அன்ரனி மாஸ்டர்

இவர் இக்கிராமத்தில் பிறந்து இக்கிராமத்துப் பாடசாலையிலும், யாழ்ப்பாணத்திலும் படித்து ஆசிரியராக இல் கிராமத்துப் பாடசாலையிலே நியமனம் பெற்று இடையிடையே சில உள்ளூர் மாற்றங்களோடு — இறுதி ஐந்து வருடங்கள் இக் கிராமப்பாடசாலையிலே அதிபராக கடமையாற்றி — ஓய்வு பெற்றவர்.

இவருக்கு இரண்டு பிள்ளைகள். இருவருமே கொழும்பில் உத்தியோகம், பிள்ளைகளின் சாப்பாட்டு வசதிக்காக அன்ரனி மாஸ்டரின் மனைவியும் கொழும்புக்குச் சென்றுவிட, பென்சன் காசை எடுத்துக் கொண்டு இக்கிராமத்திலேயே இருக்கின்றூர்.

நிலாவெளி அந்தோனியார் தேவாலயத்தின் பரிபாலகர் இவர்தான் — வயது முதிர்ந்த நேரத்தில் ஆண்டவனின் திருவடிகளை ஆராதிப்பதால் ஆத்ம திருப்தி ஏற்படும் என்பது இவரது அபிப்பிராயம்.

இக்கிராமத்தவர் அனைவருமே இவரை 'அன்ரனி மாஸ்டர்' என்று தான் அழைக்கின்றூர்கள் இப்பகுதியிலுள்ளவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் இவரது மாணவர்கள்.

இவருக்கு அறுபது வயதாகி விட்டாலும், இவரது முகத்தில் இன்னமும், உத்தியோகங்கள் ' இலட்சணங்கள் ' முற்ருக மறையவில்லே.

இவர் தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் பாண் டித்தியம் உள்ளவர்.

பால் போல் நரைத்துவிட்ட தலேயை நிமிர்த்தி இவர் நடந்து வருகின்ற போது, அந்த நடையில் ஒரு கெம்பீரம் தென்படும்—

அவரது கையில் எந்த நேரமும் நிட்சயமாக ஒரு ஆங்கி லப் புத்தகம் இருக்கும்

மிகவும் மதிப்பிற்குரியவர்.

அன்ரனி மாஸ்டரைப் பல தடவைகள் சந்தித்துப் பேசியிருக்கிருன் — உதவிகள் பெற்றிருக்கிருன், அப்போ தெல்லாம் உக்குளுக்கு அவர்மீது மதிப்பிருந்ததில்லே, அவர் மீது மதிப்பேற்பட்டு, எந்தவித எதிர்பார்ப்புமின்றி அவனு கத் தேடிச் சென்ருனே .. அந்த - முதற் சந்திப்பு !

அந்தோனியார் தேவாலயத்தின்பின் அறையில்த்தான் சந்தித்தான்.

" ஐயா— "

' ... ஒண்டுமில்லே சும்மா தான் வந்தனுன்... "

... ஐயா... சுகமா... "

" வேறை என்ன... "

" ஐயா... "

" என்ன... உக்குள்... சொல்லு... "

' எல்லாருமே உங்களே உரிமையோடை ' சேர் ' எண்டு சொல்லுகினம், ஏனெண்டால் உங்களிட்டைப்படிச்சவை, உங்களிட்டைப் படிக் காட்டியும் ஏதோவொரு பள்ளியிலே

படிச்சவை .. நான் வாசலைமிதிக்காதவன்... நான் உங்களை எப்பிடிக் கூப்பிடுகிறது... ''

மாஸ்டர் சிரிக்கிருர் - அமைதியான - அன்பான சிரிப்பு! அவரது கண்களில் யேசுவின் கண்களில் காணப்படுகின்ற கருணை ஒளி!

'' என்னையா சிரிக்கிறியள் ''

' மனதில் அன்பிருந்தால் எப்படிக் கூப்பிட்டாலும் அது இனிமையாகத்தான் இருக்கும்... ஆண்டவனின் குடிநிலங்களில் அன்பும் ஒன்று ..''

''அன்பை நான் சரிவர அனுபவிக்காதவன்...''

''எனக்குத் தெரியும்...''

''...தெரியுமா...''

''தெரியும்... பிறரிடமிருந்து போதியளவு அன்பு உனக்குக் கிடைக்காததினுல்த்தான் நீ கெட்டவனுனுய் . பிறரிடமிருந்து எவ்வளவுக்கு ஒருவன் அன்பைப் பெறுகிருனே, அவ்வளவுக்கு அவனும் பிறருக்கு அன்பை வழங்குவான் .. அன்பை மதிப்பவன் ஆண்டவனை மதிக்கின்ருன்... ஆண்டவனை மதிப்பவன் .. கெட்டவனுவதில்லை ..''

அன்ரனி மாஸ்டரில், உக்குள் யேசுவைக் காண்கிருன்.

'' ஐயா... நான் பாடசாலைக்குப் போனதில்லை .. ''

தெரியும்...

'' கோவிலுக்குப் போனதில்லை... ''

'' தெரியும்...''

'' செய்ததெல்லாம் கெட்ட செயல் ..''

'' யாரும் என்னை மதிப்பதில்லை...''

'' அப்படிச் சொல்லாதே...''

"யார் என்னை மதிக்கிறார்கள் .." உக்குளின் கண்களில் ஆச்சரியக்குறி!

"நான் உன்னை மதிக்கிறேன்..."

"ஐயா..."

"நீ ஒரு ஞானி..."

"என்ன சொல்கிறீர்கள்..."

"கெட்டுப் போன ஒருவன் எப்பொழுது தன்னை உணர்ந்து இருந்த நினைக்கிறானோ, அன்றே அவன் ஞானியாகி விடுகிறான்..."

உக்குளால் பேசமுடியவில்லை.

அவனது கண்கள் முதல் முறையாக கலங்குகின்றன...

"நான் உங்களை 'சேர்' என்று அழைக்கலாமா"

"என்னைச் 'சேர்' என்று சொல்ல இந்தக் கிராமத்திலேயே உனக்குத்தான் தகுதி இருக்கு..."

உக்குள் மனநிறைவோடு திரும்புகின்றான்.

இச்சம்பவம் நடந்து ஒரு வருடமாகுகின்றது. அதன் பின்பு உக்குள் அடிக்கடி அன்ரனி மாஸ்ரரிடம் செல்வான். அதன் பின்புதான் அவனின் போக்கிலும் பேச்சிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது.

இருந்தாலும், மனதில் ஊறிப்போன அந்தக் கெட்ட குணங்களுக்கும் சிலவேளைகளில் அவன் அடிமையாகிவிடுகிறான்.

உக்குள் அன்ரனிமாஸ்டரின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கிறான்.

அன்ரனிமாஸ்டரின் வீட்டை நெருங்கிவிட்டான். மாஸ்டரின் அறை யன்னல் கதவுகள் திறந்து உள் 'லைற்' எரிந்து கொண்டிருக்கின்றது. மாஸ்டர் இந்த வயதிலும் எதையுமே நேரக்கணக்கின்படிதான் செய்கிறார்.

படிப்பது, படுப்பது, உண்பது, குளிப்பது... சகல செயல் களுக்கும் ஒவ்வொரு நேரமுண்டு.

"சேர்..." உக்குள் மிகவும் பணிவோடு அழைக்கின் றான்.

"உக்குளா..."

"ஓம் சேர்..."

மாஸ்ரர் கதவைத்திறந்து அவனை உள்ளே அழைத்து உட்கார வைக்கிறார்.

"நான் உன்னை எதிர்பார்த்தன்" அனுபவமுதிர்வில் ஏற்படுகின்ற கூர்மை, அந்தக் கூர்மையின் நுனியில் தானு கவே ஊறுகின்ற தீர்க்கதரிசனம் மாஸ்டர் அவனை எதிர் பார்த்தார். "சேர்"

"நான் ஒரு தவறு செய்து போட்டன்" உக்குள் எத் தனையோ தவறுகள் செய்திருக்கின்றான். ஒரு நாளாவது தவறைத் தவறென்று அவன் ஒப்புக்கொண்டதில்லை; அன் ரனி மாஸ்ரரிடம் நெருங்கிப்பழக ஆரம்பித்தபின்தான் செய்கின்ற தவறுகளை தன்னுள் ஒப்புக் கொள்ளத் தொடங்கி இன்று தான் முதல் முறையாக வாய்விட்டு கூறுகிறான்.

"எல்லாம் கேள்விப்பட்டன்..."

"..எப்பிடியாவது என்னைக் காப்பாற்றுங்கோ..." இது வரையில் யாருக்குமே பயப்படாத உக்குள், இப்போது, மரி யாம்பிள்ளைக்கும், பொலிசுக்கும் பயப்படுகின்றான்,

"சேர் நான் செய்தது பிழையா..."

"தம்பி - மரியாம்பிள்ளை பணக்காரர்... அவரிடமி ருந்து கருணையை எதிர்பார்க்கலாமா... வயிற்றுப்பசியை உணராத மனிதன் இந்த உலகத்தில் இருக்க முடியாது... அப்படி உணர்ந்தும் உணராதவன் போல் நடிப்பவன்தான் முதலாளி ..

... ஒரு முதலாளியின் இதயம் மயான பூமியைப்போன்றது நீதி, நியாயம், கருணை, பாசம், பக்தி போன்றவற்றின் கல்லறைகள் தான் அப்பூமியில் காணப்படும்...

.. மயான பூமியில், மங்களகரமான ஓசையை எதிர் பார்த்தது உன்னுடையதவறு...

அன்ரனி மாஸ்டர் கதைப்பது...

சமய சித்தாந்தமா?...

பொருளாதார மாற்றத்தை வேண்டி நின்றோரின் தத்துவங்களா? . !

" சேர் .. நான் முதலாளியை அடித்தது தவறு "

" வெந்துபோன எந்தவொரு இதயமும் அந்தச் சூழ்நிலையில் அப்படியானதொரு முடிவுக்குத்தான் வரும் . அதைத்தான் நீயும் செய்திருக்கின்றாய் ..

... ஆனால்...

இந்தச் சம்பவத்தின் மூலம் உன்னை உயர்த்திக்கொள்ள நினைக்காதே...

...' எவன் தன்னைத் தாழ்த்துகிறானோ, அவன் உயர்த்தப்படுவான் ' என்று யேசு சொல்கிறார் ... " மாஸ்டரின் போதனைகள், உக்குளின் உள்ளத்திலே அர்ஜுன பாணங்களாகத் தைக்கின்றன !

சேர்... நான் இனிச் செய்ய வேண்டியது என்ன... "

" நீ தலைமறைவாகவே இருந்து கொள். இப்போது மரியாம்பிள்ளை கோபமாக இருப்பார், ஒரு நாள் பொறுத்து .. அவரது கோபம் தணிந்தபின், நான் அவரைச் சந்தித்து அவரைச் சமாதானப் படுத்துகிறேன் ... "

"சேர் நான் போகட்டா...'

..."போய் வா.. கர்த்தர் உன்னைக் காப்பாற்றுவார்..."

உக்கிள், மாஸ்டர் வீட்டிலிருந்து புறப்பட்டு ஒழுங்கை வழியே பாடசாலையை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றான்.

அவன் மனம் மாஸ்டரைப் பற்றியே சுற்றிவருகின்றது.

'மாஸ்டரைத் தான் சந்திக்காது போயிருந்தால், தான் வாழ்க்கை முழுவதும் கெட்டவனாகத்தான் இருந்திருப்பேன்' இப்படி அவன் மனம் எண்ணிக்கொள்கின்றது.

மாஸ்டர் ஒரு முறை தன் தவறை மன்னித்த அவன் நினைத்துக் கொள்கிறான்.

அந்தச் சம்பவத்தின் பின்பு தான் மாஸ்டரை உக்குள் மதிக்கத் தொடங்கினான்.

அன்று

இரவு பத்துமணியிருக்கும்.

மரியாம்பிள்ளை வீட்டில் உக்குள் இருந்தான்.

"உக்குள் அன்ரனி மாஸ்டரின்ரை தென்னந்தோட்டத்திலை நல்ல தேங்காய் கிடக்கு.. ஒருக்கா "போட்டுவாவன் காசு தரலாம்" உக்குளின் களவு செயலுக்கு, மரியாப்பிள்ளை வழி வகுத்துக் கொடுத்தார்.

உக்குள் சாக்கையும், கயிற்றையும், தேங்காய் உரிக்கின்ற கம்பியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

மரத்திலேறி, கயிற்றின் மூலம் தேங்காய்க்குலைகளை இறக்கி, மரத்தடியிலே தேங்காய்களை உரித்துச் சாக்கில் போட்டுக் கொண்டு வந்துவிடுவான்.

உக்குளுக்கு இது முதற்தடவையல்ல-

உக்குள் மரத்திலேறி தேங்காய்க் குலைகளை கயிற்றின் மூலம் சத்தம் போடாமல் இறக்கி, உரித்துக் கொண்டு நின்றபோது—

அன்ரனி மாஸ்டர் வந்து விட்டார் -

அடுத்தது —

வருபவரைத் தாக்கி விட்டு ஓடுவது ..

உக்குள், தேங்காய் உரிக்க உபயோகித்த கம்பியைப் பிடுங்கி விட்டான்....

ஒரு விஞடி—

"தம்பி அவசரப்படாதை..." மாஸ்டர் குரல் கொடுத்தார்.

உக்குள் திகைத்து விட்டான்.

அருகில் வந்த மாஸ்டர், உக்குளை இனங்கண்டு கொண்டார்.

"...தம்பி... மிச்சத் தேங்காய்களையும் உரித்துக்கொள் மாஸ்டர் கூறினர்.

உக்குளால் எதுவும் செய்யமுடியவில்லை.

அவனது மனநிலையை உணர்ந்து கொண்ட மாஸ்டர் மிகுதித் தேங்காய்களையும் உரித்துச் சாக்கிலிட்டுக் கட்டிக் கொடுத்தார்.

ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு என்று யேசு கூறினரே .. அது தானு?

"தம்பி... இனிமேல் இரவிலை வராதை... பாம்பு பூச்சி கடிக்கப் பார்க்கும்... பகலிலை வா .. அவசரப்படாமல், ஆறுதலாகப் பிடுங்கிக் கொள்...

" பட்டினி கிடக்காதை "

" ...கர்த்தர் எனக்குத் தாராளமான நிலங்களைத் தந்திருக்கின்றார். உன்னைப்போன்ற ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பது தான் என்னுடைய ஆசை... கர்த்தரின் கட்டளையும் அதுதான்

...இங்கு நடந்தவைகளை யாருக்கும் சொல்லாதே... உன்னைக் " கள்ளன் ' என்று கூறுவார்கள் .. ' மாஸ்டர் கூறிவிட்டு சென்று விட்டார்.

உக்குள் ...¡ ?

மௌனமாக நடந்தான் தேங்காய்ச் சாக்கைவிட, அவனது இதயம்' இனம் புரியாத உணர்வுகளால் நிறைந்து அதிகமாகக் கனத்துக் கொண்டிருந்தது.

நடந்து முடிந்த சம்பவத்தை உக்குளின் மனம் அசைபோட்டு முடிக்கின்றது.

அவன் பாடசாலையை அடைகிறான்.

## 4

சுந்தரம் மகனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றான்.

" தம்பி... மாஸ்டரை சந்திச்சியா... "

" சந்திச்சன் ... "

" நடந்த தெல்லாத்தையும் சொன்னியா "

" சொன்னன்... "

" என்ன சொன்னார்... "

"நாளைக்கு என்னைத் தலைமறைவாக இருக்கச் சொன்னார்.. பிறகு, தான் மரியாம்பிள்ளையைச் சந்திச்சு சமாளிக்கிறன் எண்டார்..."

"அப நாளைக்கு நீ எங்கை தங்கப் போருய் "

"தென்னந் தோட்டத்துக் கொட்டிலுக்கை தங்குவம்..." பொலிசாருக்கு மறைந்து வாழ்வது உக்குளுக்குப் புதிதான சங்கதியல்ல!

"தம்பி.. அவசரப்பட்டு நடந்து கொள்ளாதை.. மாஸ்டர் சொன்னபடி நட.."

உக்குள் திரும்பவும் பாடசாலைத் திண்ணையில் படுத்துக்கொள்கிருன் சுந்தரத்தால் படுக்க முடியவில்லை.

மரியாம்பிள்ளை பணக்காரன், எதையும் செய்யக் கூடியவன் அதனுல் தன்மகனுக்கு அவனுல் ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று யோசிக்கின்முன்.

மரியாம்பிள்ளை

இவரது உண்மைப்பெயர் மரியான்

இப்போது மேரி ஸ்ரோர் இந்த இடத்தில், பத்து வருடங்களுக்கு முன்பு மரியான் என்ற தன் சொந்தப் பெயருடன் ஹொர்லிக்ஸ் போத்தலுக்குள் வீடிம், சுருட்டும், இனிப்பும் வியாபாரம் செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது உக்குளுக்கு ஐந்து வயது—

உக்குள் சுந்தரத்தோடு கடற்கரைக்குச் சங்கு விற்கப் போகின்ற நேரத்தைவிட, மிகுதி நேரம் முழுவதும் மரியானின் கடையில்தான் நிற்பான்.

மரியானின் மனைவி 'ஆண்டவன் புண்ணியத்தில்' மாதக் கணக்கு இடைவெளியில் 'நண்டும் குஞ்சும்' போல்

நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டாள். மரியானுக்குத் தன் குழந்தைகளைப் பராமரிக்கவும் தொட்டாட்டு வேலை செய்வதற்கும் 'கூலியற்ற' ஒரு உதவி தேவைப் பட்டது.

உக்குள் சிறியவனுக இருந்தாலும் சுறுசுறுப்பானவன் வயதுக்கு மிஞ்சிய மூதிர்வுள்ளவன் அவன் தான் தனது குடும்பத்திற்குப் பொருத்தமானவன் என்பதைத் தீர்மானித்துக் கொண்டான்.

சுந்தரம் தன்மகனைப் பாடசாலைக்கு விடவேண்டும் மென்று முயற்சி எடுத்தான். ஆனால் மரியான் அதை இதைச் சொல்லி... ... அதைத் தடை செய்து... அவனைத் தன்னேடு வைத்துக் கொண்டான், அன்றிலிருந்து பதினைந்து வருடங்கள் மரியானின் கையாளாகவே உக்குள் இருந்து வந்தான்.

உக்குளை மரியான் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டான்.

மரியானின் பெட்டிக்கடை, பலசரக்குக் கடையாக்கி இறைச்சிக்கடையும் குத்தகைக்கு எடுத்து அதன் பின்புகள்ளுக்கடையும் குத்தகைக்கு எடுத்து, இயந்திரப்படகொன்றிற்கும் சொந்தக்காரனுகி . மேரிஸ்ரோர் முதலாளியாகி .

மரியான் – 'மரியாம்பிள்ளை' யாகி நிற்கின்றார்...

ஆனால்

உக்குள் .

'பூரணன்' என்ற அவனது பெயரும் மாற்றப்பட்டு 'உக்குள்' என்ற பட்டப் பெயருடன், சகலருமே வெறுக்கின்ற 'தறுதலை' யாகி நிற்கின்றான்.

கடைக்குத் தேவையான காய்கறிகள், தேங்காய் போன்ற பொருட்களை உக்குள் இரவோடு இரவாகக் கொண்டுவந்து கொடுப்பான் – களவு பொய் .

இதற்காக உக்குள் பெறும் கூலி — படம்பார்க்கக்காசு!

மரியாம்பிள்ளையின் இறைச்சிக் கடைக்குத் தேவை யான மாடுகளைக் கொலை செய்து விற்பனை செய்வான்... கொலை... குடி.

இதற்காக உக்குள் பெறும் கூலி, 'நைலோன்' சாறம், சாராயம், படம் பார்க்கக்காசு...

மரியாம்பிள்ளையின் கள்ளுக்கடைக்குத் தேவையான கள்ளுகளைச் சேகரிப்பது, அளவாகத் தண்ணீர் கலப்பது. கள்ளுக் கடையின் பின்புறத்தில் சட்டவிரோதமாகச் சாரா யம் விற்பது - கள்ளுக் கடையில் கலகம் எழுப்பினால் சக லரையும் அடித்துவிரட்டுவது — சண்டித்தனம் -

...பொலிஸ் வந்தால் கைதியாகச் செல்வது.. இதற்காக உக்குள் பெறும் கூலி - சாராயம், சிகரட், வயிறுநிறையச் சாப்பாடு...

மரியாம்பிள்ளையின் இயந்திரப்படகு இதில்த்தான் மரி யாம்பிள்ளை அதிகமாக உழைத்தார்.

நிலாவெளிக் கடற்கரையியிலிருந்து கிட்டத்தட்ட இரண்டு மைல்களுக்கப்பால், கடலுக்குள் ஐந்து ஏக்கர் விஸ் தீரணமுள்ள ஒரு மலைப்பிரதேசம் அமைந்திருக்கின்றது. இதைப் 'புறாமலை' என்று கூறுவார்கள். இங்கு மலைகளையும், மரங்களையும் விடவேறெதுவும் இல்லை.

நிலாவெளிக்கு வருகின்ற உல்லாசப் பிரயாணிகள் நிட்சயமாக 'புறாமலைக்கும்' செல்வார்கள். இங்கு எந்த விஷேசமுமில்லாவிட்டாலும் சகலரும் விரும்பிச் செல்வதற்கு காரணமுண்டு .....

தனிமையில் குடித்து... கடலில் குளித்து பிறந்த மேனி யராகி... ஆணும் பெண்ணுமாய்... நேரம்போவதே தெரியா மல்.

இவர்களைக் கொண்டு சென்று புளுமலையில் விட்டுதிரும்பவும் அவர்களை ஏற்றிவந்து நிலாவெளிக் கடற்கரையில் இறக்கிவிட

ஒருமணித்தியாலம் - முன்நூறுரூபா! - சென்று திரும்பும் வரை உக்குளும் அவர்களுக்கு அண்மையிலேயே இருப்பான்!

அவன் குருடனும் அல்ல —

நபுஞ்சகனுமல்ல —

தசை உறவை அணு அணுவாகக் கற்றுக்கொண்டான்! .. மிகச் சிறுவயதிலேயே!

இதற்காக உக்குள் பெறும் கூலி சாராயம் கஞ்சா அபின், சிகரட், சாப்பாடு -

... களவு பொய்...

.. கொலை குடி...

—சண்டித்தனம் பொலிஸ் நிலையம்...

. காமம் சகல கெட்டபழக்கங்களும்!

மரியாம்பிள்ளைக்குப் பணம் மிஞ்சியது, உக்குளுக்குக் கெட்ட பழக்கங்கள் மிஞ்சியது இந்தக் கிராமத்தில் எந்தக் கெட்ட செயலைச் செய்வாரும் உக்குளை நாடினர்!

சுந்தரம் - அவன் பாவம்! மரியாம்பிள்ளையை நம்பினான். பழத்தின் தோலிலுள்ள மினுமினுப்பைத் தான் அவன் கண்டான். [பழத்தினுள் கிடந்து குமையும் புழுக்களை அவனால் உணர முடியவில்லை, தனது மகன் சந்தோஷமாக' இருப்பதைத்தான் அவனால் உணரமுடிந்தது.

உக்குளை ஏணியாக்கி, அதில் ஏறி நிமிர்ந்துவிட்ட மரியாம்பிள்ளையே இப்போது எதிரியாகி நிற்கின்றார்.

"தம்பி..." நீண்ட நேரத்துக்குப்பிறகு சுந்தரம் உக்குளை அழைக்கின்றான்.

'என்னையா...'

'...ஐஞ்சு வயதிலையிருந்து மரியாம்பிள்ளை தானடா உன்னை வளர்த்தவர்... உனக்குத் தகப்பன் மாதிரி... அவரிட்டை நீ மன்னிப்புக்கேட்டாலென்ன... அவற்றை கோபம் தணிஞ்சு உங்கடை பகைமையும் மறைஞ்சிடும்...''

"ஐயா... மரியாம்பிள்ளை மனச்சாட்சி இல்லாதவன்... அவனிட்டை நான் மன்னிப்புக் கேக்கமாட்டன்...''

"என்ன தம்பி நீ சொல்கிறாய் - எங்களைப்போலை ஒட்டாண்டியாயிருந்து உழைச்சு முன்னேறின மனிசன் தானே... அவற்றை முகமும் நெத்தி நிறைஞ்ச திரு நீறும் சந்தணப்பொட்டும் .. இப்பவும் எங்கடை பிள்ளையார் கோவில் கட்டிட நிதிக்கு ஆயிரம் ரூபா தானே முதல் போட்டு வாறவை போறவையிட்டை இரந்து பணம் சேர்க்கிறார்..."

'ஐயா... அவன் ஆயிரம் குடுத்தால், பத்தாயிரம் எடுப்பான் .'

'அப்பிடிச் சொல்லாதை தம்பி ..'

'...ஐயா போன மார்கழி மாதம்... எங்கடை கிராமம் வெள்ளத்தாலை அழிஞ்சு .. நாங்களெல்லாம் அவதிப்பட்டம் .. அப்ப எங்களுக்கெண்டு மூடைமூடையாய் சட்டைத் துணிகளும், பருப்பு, மா, அரிசி எல்லாம் வந்திதே அதிலை இன்னும் எத்தினை மூடை சாமான்கள் மரியாம்பிள்ளை வீட்டிலை இருக்கெண்டு உனக்குத் தெரியுமா... நான் நேரிலை கண்டவன்...'

சென்ற மார்கழிமாதம்... அதிக மழை பெய்ததால் கிராமத்தில் வெள்ளம் நிரம்பி, இக்கிராமத்து மக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

அப்போது உக்குளுக்கும் மரியாம்பிள்ளைக்குமிடையில் மனக்கசப்பு இருந்தாலும் இருவருமே வெளியிட்டுக் கொள்ளவில்லை,

மரியாம்பிள்ளையின் 'ஏவல் நாயக' நின்ற உக்குள் இப்போது நியாயமற்ற ஏவல்களை ஏற்க மறுத்துவிடுகிறான். அதனால் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு, மார்கழிமாத வெள்ளப் பெருக்கின்போது, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வெள்ள நிவாரணப்பொருட்கள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனை உக்குளுக்கும் மரியாம்பிள்ளைக்குமிடையில் தெளிவானதொரு பிளவை ஏற்படுத்திவிட்டது.

ஆனால் மரியாம்பிள்ளை உக்குளோடு கதைக்கத்தான் செய்தார் .. பெரியமனிசத் தந்திரம்!

வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு கிராமத்து மக்களெல்லாம் இருக்க இடமின்றி – உணவின்றி உடையின்றி அவலப்பட்டபோது உக்குளும் இன்னும் சிலரும் உண்மையாகவே உழைத்தனர்.

அன்ரனி மாஸ்ரர் தலைமை வகித்தார்.

அரசாங்கத்தால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன, இதற்குப் பொறுப்பாக இருக்க மரியாம்பிள்ளை முதலாளி தானகவே முன்வந்தார்.

அன்றிரவு -

மின்சாரத்தடை என்று கூறி, மேரிஸ்டோர் பூட்டப்பட்டு இருளில் மூழ்கிக்கிடந்தது வெள்ள நிவாரண பொருட்களை ஏற்றிவந்த லொறி மரியாம்பிள்ளை முதலாளியின் கடைவாசலில் நிறுத்தப்பட சில மூடைகள் இறக்கப்பட்டன...? பஞ்சப்பட்டவர்களின் வயிற்றை நிறைக்க வேண்டிய பொருட்கள்...

இச்சம்பவத்தின் உள்ளடக்கத்தை அங்கு நின்ற ஒரு சிலர் புரிந்து கொண்டாலும்... மரியாம்பிள்ளை முதலாளியை எதிர்க்கின்ற துணிவின்றி மௌனிகளாகி... தங்களுக்குள்ளேயே குமுறிக்கொண்டனர்.

ஆனால் உக்குள் —

அவன் 'அறநனைந்தவன் குளிருக்கும் அஞ்சுவானா' நேரடியாகவே கேட்டுவிட்டான்!

அது - மரியாம்பிள்ளைக்கு ஒத்துக் கொள்ளவில்லை.

இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் பலதையும் கதைத்து 'உக்குள் வெறியிலை அப்பிடிக் கதைச்சுப் போட்டான்.. எனக்கதிலை கவலையில்லை' என்று கூறி உக்குளின் நியாயவெறியை ... மதுவெறியாக்கி தனது சுரண்டல் வெறியை மறைத்துக்கொண்டார்.

ஆனால், மரியாம்பிள்ளையின் மனத்துள் அந்தச் சம்பவம் கல்லாய் சமைத்திருந்தது? சந்தர்ப்பம் பார்த்திருந்தார்!

"சேர் . மரியாம்பிள்ளை செய்தது சரியா..." வெள்ள நிவாரண வேலைகளில் தங்களோடு ஈடுபட்டிருந்த அன்ரனி மாஸ்ரரிடம் உக்குள் கேட்டான்.

"... பிழைதான் . ஆனால் மரியாம்பிள்ளையைப் போன்றவர்கள் இக்கிராமத்திலை மட்டுமல்ல — இந்த மண்ணிலை சகல இடங்களிலும் இருக்கினம்.. அதாலை மரியாம்பிள்ளையைப் பற்றி விஷேசமாகச் சொல்ல எதுவும்..."

"... எதுக்குத் தப்பினாலும் ஆண்டவன் தீர்ப்புக்குத் தப்பமுடியுமா..." உக்குள் தனக்குத் தானே கூறிக்கொள்கின்றான்.

அன்ரனி மாஸ்ரர் சிரிக்கிறார்.

"ஏன் சேர் சிரிக்கிறியள்..."

"...ஆண்டவனின் போதனைகள் மனிதனை நல்லவனாக்குமே தவிர, மனித சமுதாயத்திலுள்ள முரண்பாடுகளை நீக்காது... மரியாம்பிள்ளை போன்றவர்களில் முடிவை மனி

தன் தான் தீர்மானிக்கவேண்டும் ..'' அன்ரனி மாஸ்டரின் பேச்சுக்களை உக்குளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"என்ன சேர் சொல்லுறியள் ?''

"...உக்குள் உன்னைப்பற்றி யோசிச்சுப்பார் ..''

மாஸ்டரைக் கூர்மையாக நோக்குகிறான் உக்குள்!

"..நீ செய்த கெட்ட வேலைகளையெல்லாம் நீ பிறக்கும் போது கொண்டு வந்தாயா...''

"இல்லை...''

"அப்பிடியெண்டால் அவைகளை நீ எங்கை கற்றுக் கொண்டாய்...''

"இந்தக் கிராமத்திலைதான் பழகினேன் ..''

"அப்பிடியெண்டால் .. இந்த மண்ணிலை நீ பழகிக் கொண்டதைத்தான் திரும்பவும் செய்யிறாய் ..''

உக்குளால் பேசமுடியவில்லை தலையை மட்டும் அசைத்து மாஸ்டரின் பேச்சை ஒத்துக் கொள்கிறான்.

"...அப்பிடியெண்டால் நீ எப்படிக் கெட்டவனாக இருக்க முடியும்...''

உக்குளின் கண்கள் அகலவிரிய .. ஆச்சரியம் கலந்த - கேள்விக்குறியோடு மாஸ்டரைப் பார்க்கிறான்.

"சேர்... அப்பிடியெண்டால்— நான் நல்லவனா?...

'... இந்த மண்ணிலை நடந்துவருகிற கெட்டகாரியங்களைத்தான் நீயும் செய்வதால் ... மற்றவர்களைப் போல் நீயும் ஒரு சாதாரண மனிசன்...

ஆனால்.........?...

நல்லனவல்ல......?

...அதே நேரத்தில்...

... உன்னைக் கெட்டவன் எண்டு சொல்லிவிட, இந்த மண்ணிலை ஆருக்குமே தகுதியில்லை...''

இந்தச் சமுதாயத்தை ஆசானுக்கி மாஸ்டர் கூறுகின்முர். சமயத் தொண்டரான அவரது பேச்சில் பொருளாதாரத்தத்துவம் கலந்திருக்கின்றது.

வெள்ள நிவாரண செயலோடு தொடர்புபட்ட உக்குளின் சிந்தனை நீண்டு முடிவுறுகின்றது. ஆதரவற்ற அந்த இரண்டு ஜீவன்களும் சிறிது உறங்குகின்றன.

கிடைத்ததை உண்டு, கண்ட இடத்தில் தூங்குகின்றவர்கள்...

பசுவின் மடியிருந்து சிந்துவதும் பால்தான்...

கள்ளி மரத்திலிருந்து சிந்துவதும் பால்தான்

இரண்டுமே ஒன்ருகுமா?...

உயிருள்ளவரை வாழ்க்கைதான் என்ருல் இவர்களின் வாழ்க்கை...?

## 5

வயலுக்குச் செல்லுகின்ற மனித ஜீவன்களின் அரவம் ...விடியப்புறம் ஐந்துமணி.

உக்குள் திடீரென்று கண்ணை விழித்துக்கொள்கிருன்.

இந்த உலகத்திலே அவனோடு ஒட்டியிருக்கும் ஒரே உதவியான...உயிரற்ற அந்த ஊன்றுகோலை ஒரு கையால் பிடித்தபடி அயர்ந்து தூங்குகின்ற தகப்பனை - சுந்தரத்தை .. முளங்காலோடு அஸ்தமனமான அந்த இடதுகாலையும் பார்க்கும்போது . உக்குளின் மனம் வெதும்புகின்றது.

சில தினங்களுக்கு முன்புகூட —

ஒருதாய் தனது நான்கு பிள்ளைகளையும் தூக்கிப்போட்டுக்கொண்டு, தானும் குதித்து இறந்துபோனதொரு சம்பவம் திருகோணமலையிலுள்ள, கோணேசர் மலையில் நிகழ்ந்தது— அந்தக் கோணேச பெருமான் கூட தடுக்கவில்லை.

அது போல —

...நானும் ஐயாவும் செய்து கொண்டாலென்ன?

எவ்வளவோ சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அப்போதெல்லாம் அவன் இப்படிச் சிந்தித்ததில்லை.

ஆனால், இப்போது —

தன்னை உணர்ந்துகொண்ட நிலையில், தன்னை அழித்துக் கொள்ள எண்ணுகிறான்!

"ஐயா " தகப்பனை எழுப்புகிறான்.

சுந்தரம் எழும்புகிறான்.

"விடியப் போகிது... நீ வீட்டைபோ... நான் கிழவியின்ரை கொட்டிலுக்குப் போறன்... பொலிசு வந்தால் எங்கையெண்டு தெரியாது எண்டு சொல்லு...உக்குள் கூறிவிட்டு எழுந்து நடக்கின்றான்.

"தம்பி அவசரப்பட்டு வெளியில வெராதை...எதாலும் அவசியமெண்டால் நான் வாறன்..." சுந்தரம் அனுதாபத்தோடு கூறுகிறான். சுந்தரம் ஊன்றுகோலை ஊன்றியபடி தனது குடிசையை நோக்கி நடக்கின்றான்.

பாடசாலை வளவிலிருந்து கல்லுறோட்டுக்குவந்து, திரும்ப மண் ஒழுங்கையில் இறங்கி கடற்கரையை நோக்கி நடக்கின்றான் உக்குள் கடற்கரையில் அமைந்திருக்கும் மிகப் பிரபலமான அந்த உல்லாசப் பிரயாணிகள் விடுதிக்கு அரு

கேயுள்ள தென்னந் தோட்டத்தின் மத்தியில்தான் கிழவி யின் கொட்டில் அமைந்திருக்கின்றது. அந்தக்கொட்டிலில் தான் இன்று பகல் பொழுதைக் கழிக்கப் போகின்றான்.

கிழவி— அன்னம்மா

அன்னம்மாவும், அவளது புருஷன் செல்லப்பாவும் மட்டுந்தான் இந்தக் கொட்டிலில் வாழ்கின்றனர்.

மண் ஒழுங்கையில் நடந்த உக்குள் கடற்கரையில் மிதந்து, நடந்து கொண்டிருக்கின்றான்.

"உக்குள் கடல்நீரைப்பார் மிகவும் உப்பாக இருக்கின் றது... மலையில் ஊற்றெடுக்கின்ற நீர்தான் கடலில் வந்து சேர்கின்றது... மலையில் ஊற்றெடுக்கின்ற நீர் புனிதமானது. ஆனால் அது பாய்ந்து வருகின்ற வழியிலுள்ள பொருட்களால் தான் உப்பு நீராக மாறுகின்றது.. அதுபோலேதான் மனி தனும்... பிறப்பில் மனிதன் தூய்மையானவன்... அவன் வாழுகின்ற சூழல்தான் அவனை நல்லவனாகவோ, கெட்ட வனாகவோ மாற்றுகின்றது...

...ஒரு மனிதனின் வாழ்க்கைப்படிகள் பலதரமானவை... ஒவ்வோர் தரத்திலும் ஒவ்வோர் விதமான பாசப்பிணை ப்புக்களை அனுபவிக்கின்றான்... அந்தப் பிணைப்புக்கள்தான் தன்னையும், தனது குடும்பத்தையும், தனது சமூகத்தையும், இந்தச் சமுதாயத்தையும் படிப்படியாகத் தொடர்புபடுத்திச் சிந்திக்க வைக்கின்றது

நீயோ..

...பிறப்பிலேயே தாயன்பை அறுத்துக் கொண்டு பிறந் தாய்... உனக்கு ஆதரவாக இருந்த தகப்பனோ...நிதானமாக நிமிர்ந்து நிற்க முடியாதவன்... உனது பிஞ்சுக்கரங்களா லேயே உனது பிஞ்சு வயிற்றை நிரப்பவேண்டிய நிலை...

சிறுவயதிலேயே சமுதாயத்தால் விரட்டப்படுபவர்கள் சரியான பாதையில் செல்வதில்லை...

உன்னையும் கரடு முரடான பாதையில் இந்தச் சமுதாயம் துரத்தியது...

உன்னையறியாமலே நீ ஓடினாய்...

அந்த ஓட்டத்தில் பழக்கப்பட்டாய்...

உன்னைமட்டும் நீ உணர்ந்த வயதில் அந்தப் பழக்கத்தை விருத்தி செய்து கொண்டாய்...

சமுதாயத்தை உணர்ந்ததன்பின் திருந்தப்பார்க்கிறாய்

ஆனால், இந்தச் சமுதாயமோ — உனது பழைய பெயரைச் சொல்லி இப்பவும் விரட்டுகின்றது!...

ஒரு மனிதன் ஒரே நிமிடத்தில் கெட்டவன் என்ற பெயரை எடுக்கலாம். ஆனால் அதே ஒரு நிமிடத்தில் நல்லவனென்ற பெயரை எடுக்க முடிவதில்லை!...

அதுதான் இந்தச் சமுதாயத்தின் பலவீனம்.

ஒன்றை ஏற்றுக் கொள்கின்றது—

இன்னொன்றை ஏற்க மறுக்கின்றது—

அதற்குக் காரணம் கேட்டால்...

எதையெதையோ கூறுகின்றது !

அதற்காக கெட்டவர்கள் நல்லவர்களாகிவிட முடியாதென்று நீ நினைக்காதே...

...நீ நல்லவனாக நட...

என்றோ ஒருநாள் இந்தச் சமுதாயம் உன்னை ஏற்றுக் கொள்ளும்.

அன்றொருநாள் உக்குளுக்கு அன்ரனி மாஸ்டர் கூறிய அறிவுரைகள்... இப்போது அவனது செவிப்பறையில் திரும்பவும் ஒலிக்கிறது.

கடற்கரை மணலில் அவனது பாதச் சுவடுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் கடற்கரை மண்ணில் உக்குளின் கால் படாத இடமே இருக்கமுடியாது.

இவன் படுத்து உடம்பு புரட்டி, தவழ்ந்து நடை பயின்றதெல்லாம் இந்த மண்ணில்த்தான். இவனைப் பெற்ற வள் இறந்துபோக சுந்தரம் சங்கு வியாபாரத்துக்கு வரும் போது இவனையும் கொண்டுவந்து இந்த மண்ணில் கிடத்தி விட்டு தனது வியாபாரத்தைக் கவனிப்பான்.

கடற்கரையில் வானளாவி நிற்கின்ற புன்னைமரம் அதற் கும் உக்குளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

அந்தப் புன்னை மரத்தடியில்தான் சுந்தரம் இவனைக் கிடத்துவான். இந்த மரத்தடியில்தான் இவனது வளர்ச்சி யின் பெரும்பகுதி நிகழ்ந்திருக்கின்றது.

இந்தப் புன்னைமரத்திற்கும் உக்குளுக்கும் பெரும் சம் மந்தமுண்டு.

புன்னைமரம், விதையினுள் முளைத்து நிலத்தில் வேரூன்றி தன்னை வளர்த்துக் கொண்டது. அதே போல் உக்குளும் அவனது ஐந்து வயதின் பின்தானே தன்னைக் கவனித்து கொண்டான்!

மரத்தோடு ஒத்து வளர்ந்த பரிதாபத்திற்குரியதொரு மனிதப்பிறவி அவன்.

புன்னை மரத்தடியில் மண் புழுவாய்க் கிடக்கும் உக்குளை அந்த அன்னம்மாக் கிழவிதான் தூக்கிக் கொண்டுபோய் தண்ணீர் பருக்குவாள்.

சுந்தரம் உக்குளைக் கடற்கரைக்குக் கொண்டு வரு கின்ற காட்சி ..

தனது கழுத்தில் ஏணைபோல் ஒரு நாழுமுளத்துண்டைக் கட்டி, அதற்குள் உக்குளைக் கிடத்தி ஊன்றுகோலை ஒரு கையால் பிடித்து, மறுகையில் சங்குகள் நிறைந்த குட்டிச் சாக்கைப் பிடித்தபடி நடப்பான்—பாசச்சுமை கழுத்திலே தொங்கி...

உக்குள் வளைந்து போய்கிடப்பான்.

இவன் நடை பயிலும் வரை இப்படித்தான் சுந்தரம் செய்து கொண்டான்

ஒருமுறை உக்குள் புன்னைக்காயை விழுங்கி குரல் வளைக்குள் இறுகி... அன்னம்மாக் கிழவி காணாது போயிருந்தால் உக்குளின் சரித்திரம் முடிந்து போயிருக்கும்.

அன்னம்மாக் கிழவிக்கு உக்குளின் மீது நிறையப் பற்றுண்டு. உக்குள் கூட அன்னம்மாக் கிழவியிடந்தான் தாயன்பின் சாயலைக் கண்டுகொண்டான்.

உக்குள் புன்னைமரத்தடியில் கிடந்தது.

நடக்கப் பழகியபின் சங்கு நிறைந்த குட்டிச் சாக்கைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு, கிளிந்த களிசானுடன் தகப்பனுக்குப் பின்னால் ஓடியது...

உல்லாசப் பிரயாணிகளிடம் தனது பிஞ்சு கைகளை நீட்டி பிச்சைகேட்டது—

பாடசாலைக்குச் செல்கின்ற காலத்தில் பாடசாலைக்குச் செல்லாமல் தனித்து சங்கு வியாபாரம் செய்தது ..

வருவோர் போவோர்கள் காரணமின்றி அடிப்பார்கள்...

கடற்கரைக்கு காற்றுவாங்க வருபவர்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால், இவனிடம் காசைக்கொடுத்து துரத்துவார்கள் மறுத்தால் அடிப்பார்கள்... அதற்குப் பயந்து காசை வாங்கிக்கொண்டு கடையைநோக்கி ஓடுவான் கடற்

கரையிலிருந்து கடை அரைமைல் தூரமிருக்கும். போகவர ஒருமைல் .. கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்க கடற்கரைக் காற்றிலும் வியர்த்துக்கொட்ட அவன் வருவான்!

வந்த களைப்புத் தீரமுன் திரும்பவும் யாராவது கடைக்குக் கலைப்பார்கள்.

இனுமாகக் கிடைக்கின்ற சிறு மீனுக்காக கரவலைக்காரருடன் சேர்ந்து, கயிற்றைப்பிடித்து இழுப்பான்.

உல்லாசப் பிரயாணிகள் தங்கும் அந்த விடுதிக்குப் பின்னுவுள்ள கழிவுப்பொருட்கள் போடுகின்ற தொட்டிக்குள் இறங்கி அதற்குள் சில உணவுப் பொருட்களைத் தேடி அவற்றை கடல்நீரில் கழுவிக் கடிப்பான்.

மரமாய், நாயாய், பன்றியாய், குரங்காய்... அவன் வாழ்ந்த வாழ்வின் பரிதாபத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் கடல் அலைகள் கூட கொந்தளித்து இந்த உலகத்தையே அழித்துவிடுகின்ற விருப்புடன் மோதித் தெறிக்கும்!

மனிதனுக வாழ நினைக்கின்ற உக்குளைக் கண்ட சந்தோஷமோ—என்னவோ, இன்று கடலலைகள் சலனமற்றுக் குளம் போலக் கிடக்கின்றன.

கடற்கரையில் நடந்த உக்குள் அன்னம்மாக்கிழவியின் கொட்டிலை அடைகின்முன்.

" ஆச்சி .. '' அன்னம்மாக்கிழவியை ஆச்சி என்று தான் உக்குள் அழைப்பான்.

'' உதார் உக்குளே... ''

'' ஓம் ''

' படலையைத் திறந்துகொண்டு உள்ளை வா .. '' செல்லப்பா எழும்பி விளக்கைக் கொழுத்துகிருர்.

'' ...எல்லாம் கேள்விப்பட்டன் உக்குள்... உன்னைத் தேடி உன்ரை வீட்டுக்குப் போனேன் .. வீட்டில ஒருத்தரும் இல்லை... விளக்குக்கூட இல்லை... அன்ரனி மாஸ்ட

ரிடம் விசாரித்தன் அவரும் தனக்குத் தெரியாதெண்டு சொன்னூர். இரவு எங்கை தங்கினனீங்கள்...''

"பள்ளிக் குடத்துக்கை ஐயாவும் நானும் ஒளிச்சுக் கிடந்தம்...''

"மரியாம்பிள்ளை லேசுபட்டவனில்லை. ஏதாலும் செய்யத்தான் பாப்பர்ன்...'' அன்னம்மாக்கிழவி கூறுகிருள்.

ஆச்சி .. மரியாம்புள்ளையோடை மோதுறது எனக்குப் பெரிய வேலையில்லை, ஆனல் அவனிட்டைக் காசு கிடக்கு... அதைக்கொண்டு ஏதாலும் செய்யப்பாப்பான்...

"...தம்பி... நாங்கள் பஞ்சப் பரதேசியள்... நாங்கள் குட்டுப்படப் பிறந்த நாங்களே தவிர ஆரையும் குட்டப் பிறக்கவில்லை... நீ ஏன் அவனேடை மோதினனி ..''

அன்னம்மாக்கிழவி கேட்கின்ருள்.

"அவனுக்காக நான் பலபேரை அவமானப்படுத்தியிருக்கிறன், அவனுக்காக நானே பலதடவை அவமானப் படுத்தினதை என்னலை தாங்க முடியாமல் போச்சுது...''

ஒருமுறை—

மரியாம்பிள்ளைக்கு எதிரான கட்சிக்காறர் இந்தக் கிராமத்தில் கூட்டம் வைத்தபோது, மேடையில் இருந்தவர்களுக்கு உக்குள் கூழ் முட்டை வீசி .. அவர்களை அவமானப்படுத்தினன்.

கட்சி என்ருல் என்றென்றே தெரியாதவன் உக்குள்!

'கைக்கூலி' 'குண்டன்' என்றெல்லாம் வர்ணிக்கப் பட்டான்.

இன்னெரு முறை...

மரியாம்பிள்ளையின் இறைச்சிக் கடைக்கு 'கள்ளமாடு' பிடிக்கப்போய், அகப்பட்டு... மாட்டுத்தோலால் இவனது உடலைப் போர்த்தி, பொலிசார் பின் தொடர இவன் இந்தக் கிராமத்து மூலை முடுக்கெல்லாம் சென்று வந்தான்!

அவைகளைத்தான் அவன் இப்போது குறிப்பிடுகிறான்.

விடிகிறது ...

உக்குள் குடிசைக்குள் படுத்துக்கொள்கிறான்.

இப்படித்தான் முன்பு ஒருமுறை...

வீதியின் அடியில் நீர்பாய்வதற்காக வைக்கப்பட்டிருக்கும் மதகுத் துவாரத்துள் இரண்டு நாட்களாகப் படுத்திருக்கின்றான்.

அப்போது இக்கிராமத்தில் சாதிக்கலவரம் நடந்து கொண்டிருந்தது. இக்கிராமத்து சைவ ஆலயத்தில் தாழ்த்தப்பட்டமக்கள் வழிபாட்டுரிமை கோரியிருந்தனர் ..

உயர்ந்த சாதியைச் சேர்ந்த சிலரால் ஏவப்பட்ட உக்குள் தாழ்த்தப்பட்டவரின் வீடுகளுக்குத் தீ வைத்தான்.

அதனால் பொலிசாருக்குப் பயந்து மதகிற்குள் இரண்டு தினங்கள் படுத்திருந்தான்.

இப்படி எத்தனையோ தடவைகள்.

இன்றும் அதே நிலை!...

## 6

உக்குளுக்கு இப்படி ஒளித்துக் கிடப்பது புதிய காரியமல்ல - நாட்கணக்கில் கிடந்தவன் ஆனால் இப்போது - அவனால் முடியாமல் இருக்கின்றது .

"உக்குள்..."

"என்னாச்சி .."

'உன்ரை உண்மைப் பெயரென்ன' அன்னம்மாவுக்கு அவனது உண்மைப் பெயர் தெரியும் மறந்து விட்டாள்.

'பூரணன்... '

உன்ரை பெயரை எண்ட பெயரை வைச்சது மரியாம் பிள்ளை தானே... '

ஓம்...

'...உனக்கு உக்குள் எண்ட பெயரை அழிச்சது மட்டு மில்லே... உன்னையுமெல்லே அவன் அழிஞ்சுபோட்டான்'

' ஆச்சி...'

' என்ன...'

"என்ரை அம்மாவை உனக்குத் தெரியுந்தானே..."

"நல்லாய்த் தெரியும்..."

"எப்படியிருப்பா..." மிகவும் பரிதாபமாக அவன் கேட்கின்றான். இவன் இதுவரை இப்படிக் கேட்டதில்லே.

அன்னம்மாவின் இதயம் எரிந்து விட்டது! அவளும் பெண் தானே!

"லட்சணமாய் இருப்பா... எப்பவுமே சிரிச்சுக் கதைப்பா... உன்னே வயித்திலே வெச்சுக் கொண்டு எவளே வெல்லாம் கதைச்சா... பாவம் உன்ரை முகத்தைக் கூடப் பாக்காமல் போயிட்டா..."

"...என்னே பெறக்கு முன்னம் அம்மா செத்திருந்தா... நானும் செத்திருப்பன்... நான் ஏன் பிறந்தன்..."

"எங்களேப் போலே குடிசையிலே பிறந்த எல்லாரும் உப்பிடித் தான் கேக்கினம்... அதுக்குப் பதிலுமில்லே... கேள்விக்கு முடிவுமில்லே..." கொட்டிலில் படுத்திருந்த உக்குள் செத்தைத் துவாரத்தினூடாகக் கடற்கரையைப் பார்க்கின்றான்... உல்லாசப் பிரயாணிகள் நிர்வாணமாக வெய்யிலில் படுத்திருக்கின்றனர். வெய்யில் குளிப்பு'...

அவர்களுக்கு அண்மையில் இந்த மண்ணில் பிறந்த சில 'இளவட்டங்கள்'... பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் நிற்கின்றனர்!

உப்பிடித்தானே நானும் நிண்டிருப்பன்... உக்குளின் மனதில் கடந்தகால அனுபவக் குமிழொன்று வெடிச்சுச் சிதறுகின்றது!

"ஆச்சி .. அங்கை பார்..."

அன்னம்மா இதைவிட எத்தனையோ காட்சிகளேப் பார்த்து அலுத்துப் போனவள்!

"சட்டை துணி இல்லாமல் அவங்கள் கிடக்கிறுங்கள்... உந்தப் பொடியள் என்ன பாக்கிறுங்கள்... நில்லுங்கோடா வாறன்" உக்குள் சாறத்தை மடித்துக் கட்டிக் கொண்டு அந்தப் பிள்ளைகளைத் துரத்தப் புறப்படுகிறுன்.

'...உக்குள் நீ இவளவு பெரியவனுய் வளர்ந்தும் உலகந் தெரியாதவனுக இருக்கிறுய்... உந்த உல்லாசப் பிரயாணி யளாலை எங்கடை நாட்டு பழக்க வழக்கமெல்லாம் கெட்டுப்போச்சு... என்னும் கொஞ்சக் காலம் பொறுத்துப்பார் ... எங்கடை சனங்களும் சட்டை துணி இல்லாமல் ஆடு மாடுகளைப்போலை... கண்ட கண்ட இடங்களிலை... புள்ளை பெறத் துவங்கியிடுங்கள்...' அன்னம்மா சர்வசாதாரண மாகக் கூறுகின்றுள்.

'பள்ளிக்குடத்துக்குப் போற வயதிலை... கடற்கரையிலை கிடக்கிற நிர்வாண கோலங்களைப் பார்த்துக் கொண்டு நிண்டால்...

... இவர்களின் எதிர்காலம் .

... இவர்களுக்கும் எனது முடிவு தானு? உக்குள் தனக் குள்ளேயே கேட்டுக் குமைந்து கொள்கிறுன்.

"ஆச்சி இந்தப் பொடியளை ஏன் கலைக்கிறுய்... அவங் கள் இந்த மண்ணிலைதானே பிறந்தவங்கள்... எங்கையோ பிறந்து இஞ்சைவந்து கிடக்கிற உந்த வெள்ளைக்காரக் கூட்டத்தைக் கலை பாப்பம்..."

"எந்த நாட்டிலையோ பிறந்தவனுக்காக எங்கடை நாட்டுக்காறரை ஏன் கலைப்பான்.

'... இந்த வெள்ளைக்காறராலை ஊரெல்லாம் கெட்டுப் போகுதே .. இவங்களை இந்த நாட்டுக்கு ஏன் வரவிடுகி னம் எண்டு சில படிச்சாக்களிட்டைக் கேட்டன்... இவங்க ளாலை எங்கடை நாட்டுக்கு வருமானம் இருக்காம்..'

"கற்பை வித்து சீலை வாங்கிறது மாதிரி..."

தேசியத்தின் சீரளிவால் அவர்கள் புரிந்து கொண்டள வில் அவர்களுக்கு ஏதோ மனத்தாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் மௌனமாக இருக்கின்றனர்.

...உக்குள் உலகத்தைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிருய்... உன்னைப்பற்றி யோசி... இப்படியே எத்தினை நாளைக்கு ஒளிச்சிருக்கிறது...''

"அன்ரனி மாஸ்டர், தான் எல்லாத்தையும் சமாளிச் சுத்தாறனெண்டு சொல்லியிருக்கிருர்..."

"அவர் சொன்னால் செய்வார்.. நல்ல மனிசன் ..''

கடைக்குப் போயிருந்த செல்லப்பா பதட்டத்துடன் ஓட்டமும் நடையுமாக வருகின்ருர். அவரைக் கண்ட உக் குள் ஏதோ அவசரமான செய்தியுடன்தான் செல்லப்பா வருகின்ருர் என்பதை ஊகித்துக் கொள்கிருன்.

பொலிசாக இருக்குமோ?...

உக்குள் எழும்பி சாறத்தை மடித்துக் கட்டிக்கொண்டு ஓடத் தயாராகுகின்ருன்.

செல்லப்பா அண்மையில் வந்துவிட்டார்.

உக்குள் முற்றத்துக்கு வருகின்ருன்.

"உக்குள்... மரியாம்பிள்ளை உங்கடை வீட்டை கொழுத்தி... உன்ரை ஐயாவையும் அடிச்சுப் போட்டிருக் கான்... சுந்தரம் அறிவில்லாமல் கிடக்கிருன்.

செல்லப்பா கூறுகிருர்.

உக்குளின் கண்கள் சிவந்து கருஞ்சிவப்பாகி, நரம்புகள் விறைத்து, மயிர்கள் குத்திட்டு .. பற்கள் ஒன்ருேடொன்று தேய்படுகின்ற சத்தம்.

'அன்ரனி மாஸ்டர் ஆங்கை நிற்கிருர். நீ இப்ப அங்கை போகாதை.., செல்லப்பா கூறுகிருர்.

'உக்குள் நீ போடா... வாறது வெரட்டும்... அந்த மரியாம்பிள்ளையைத் துண்டு துண்டாய் வெட்டிப் போடடா ..இறைச்சிக் கடையில மாட்டைக் கொல்லவும், இறைச்சி வெட்டவும் அவன் தானே உனக்குப் பழக்கினவன்.

... உன்ரை அம்மாகூட உன்னைப் பத்துமாதந்தானடா சுமந்தவ . அவன் சுந்தரம் ஒன்றைக் காலோடை தன்னை மரமாக்கித் தன்ரை கழுத்திலே ஏணை கட்டி இரண்டு மூண்டு வருசமாய் சுமந்தவன்...

...மரியாம்பிள்ளை உன்னை அடிச்சிருக்கலாம்... அந்த நொண்டியை அடிச்சு விழுத்தினவன் .. ஒரு மனிசனு . அன்னம்மாக்கிழவி வீராங்கனையாக நிமிர்ந்து நின்று நியாயம் கூறுகிறாள்.

" அன்னம்மா நீ சும்மாயிரு .." செல்லப்பா அதட்டுகிறார் ..

உக்குளோ உடலிலுள்ள சகல உணர்வுகளும் மரணித்துப் போனநிலை!

" என்னடா உக்குள் நிக்கிறாய் .. நீ வறுமைப்பட்டவன் அதாலேதான் நீ செய்த கெட்ட காரியங்களை நினைச்சு வருத்தப்படுகிறாய் .. ஆனால் மரியாம்பிள்ளை போன்றவங்கள் எப்பவும் திருந்த மாட்டாங்கள் அவங்களை நாங்கள்தான் திருந்த வேணும்... ஏடேய் உக்குள் நான் சொல்லுறதை நல்லாய்க்கேள்.

...கண்டபடி கத்தி எடுக்கிறவன்தான்ரா கெட்டவன்... காரணத்தோடை கத்தி எடுக்கிறவன் யோக்கியன்!

.. ஏடேய் நீ மனிசனெண்டால் . துணிஞ்சு போடா!...

அன்னம்மாக்கிழவிக்கு இப்படியும் ஒரு வீர உணர்வா? .

அன்னம்மா நீ அவனைக்கிண்டாதை .

உக்குளின் பாதங்கள் நகர ஆரம்பிக்கின்றன . கடற் கரை மணலில் அவனது பாதச் சுவடுகள் நிதானமாகப் பதிகின்றன...

கடலலைகள் கூட அவனுக்கு நல்லாசிகள் கூறுவதுபோல் ஆர்பரிக்கின்றன ..

அந்தப் புன்னைமரம்...

'எனது நிழலில் வளர்ந்தவன் நீ .. உன்னைப்பற்றி எனக்குத் தெரியும் நீ எடுத்த முடிவு சரியானது... இப்போது நீ மனிதன் என்று கூறுகின்றது!

உக்குளின் நடையில் வேகம்

நிதானம்—

இந்த உலகத்தையே புரட்டி விடுகின்ற மனப்பலம்!

ஐயா .. குயில், காகக் கூட்டுக்கை முட்டை இடுகிறது போல எனக்கு நீ தகப்பனாக இருந்தாலும்... கண்டகண்ட இடமெல்லாம் கிடைக்கிறதைத் திண்டு வளர்ந்தன் .. கெட்டவனான்...

...நான் இப்ப திருத்தியிட்டன்.

கலகத்திலைதான் நீநி பிறக்கும்... இப்ப அந்தக் கலகத் தைத் தான் செய்யப்போறன்

உக்குளின் மனம் கூறிக்கொள்கின்றது.

கடற்கரையில் நடந்த உக்குள், மண் ஒழுங்கையால் நடந்து கல்லு ரோட்டில் ஏறிவிட்டான் இன்னும் சிறிது தூரம்...

'மேரி ஸ்டோர்' அந்த விளம்பர பலகை தெளிவாகத் தெரிகின்றது.

''டேய் மரியான்...'' உக்குளின் குரல் வானத்தில் முட்டி உதிர்கிறது.

சில நிமிடங்களுக்குள்

'மேரி ஸ்டோரு'க்குள் 'ஒரு பிரளயமே' நடந்து முடிந்தது.

மக்கள் கூடிவிட்டனர், எவருமே உள்ளே செல்லத் துணியவில்லை.

உக்குள் வெளியே வருகின்றான்... அவன் உடல்... முன்பு மரியாம்பிள்ளையின் இறைச்சிக் கடையில் நின்று வியாபாரம் முடிந்து இரத்தச் சகதியோடு வெளியே வருவானே... அதே கோலம்...

கடைக்குள் மரியாம்பிள்ளை குடும்பத்தினரின் அவலக் குரல்கள்...

கடையைவிட்டு வெளியே வந்த உக்குள் எதையுமே பொருட்படுத்திக் கொள்ளாமல் தனது வீட்டை நோக்கி நடக்கின்றான்.

தன் கொட்டிலுக்கு வந்துவிட்டான்.

கொட்டில் பூரணமாக எரிந்து சாம்பலாகி புகைந்து கொண்டிருக்கின்றது..

சுந்தரம் மயக்கம் தெளிந்து எழும்பி இருக்கிறான். அவனருகே அன்ரனி மாஸ்டர் சோடாப் போத்தலுடன் அமர்ந்திருக்கின்றார்.

சுந்தரத்தின் உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு கட்டுப் போடப்பட்டிருக்கின்றது.

அவனது ஊன்றுகோல் இரண்டு துண்டங்களாக முறிந்து போய்க்கிடக்கின்றன.

உக்குள்... என்ன கோலமடா... 'சுந்தரம் உக்குளின் கோலத்தைக் கண்டு கலங்கி விட்டான்.

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam



'இறைச்சிக் கடையாலை வாறன்... மிருக வேட்டை யாடிய சுவட்டில் இன்று மனிதவேட்டை ஆடிவிட்டன்!...

என்னடா சொல்லுறுய்... சுந்தரத்தால் நடந்த விஷயத்தை ஓரளவு ஊகிக்க முடிகின்றது. ஆனுல் தீர்மான மாகத் தெரியவில்லை!

அன்ரனி மாஸ்டரின் முகத்தை உக்குளால் பார்க்க முடியவில்லை.

அன்ரனி மாஸ்டர்...!...?

அவர் நிதானமாகப் பேச ஆரம்பிக்கின்ருர்

உக்குள்... இவ்வளவு காலமும் உணர்வற்ற வெறும் கூலியாகவே இருந்திருக்கின்ருய்...... இண்டைக்கு கூலியாக இல்லாமல் உணர்வுள்ள மனிதனுக நிண்டு செய்திருக்கின்ருய்...

...கவலைப்படாதை...

இந்த மண்ணிலை உள்ள சகல உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டு 'சட்டம்' எண்டு ஒண்டிருக்கு..

...அதாலை சட்டத்தின்ரை தண்டனைக்காகப் பயப்பிடாதை.

...யேசு அனைத ரட்சகன்... சுந்தரத்தை என்னேடு ஆலயத்தில் வைத்துக் கொள்கிறேன்... யேசு சுந்தரத்தைக் காப்பாற்றுவார்.

. சட்டம் உன்னைத் தேடி வருமுன் நீயே சட்டத்திடம் சரணடைந்துவிடு.

இந்தச் சமுதாயத்தாலை குட்டிச் சுவராக்கப்பட்டது. நீ மட்டுமல்ல.. ஆயிரமாயிரம் மனித ஜீவன்கள் குட்டிச் சுவராக்கப்பட்டு இந்த மண்ணிலை இருந்து கொண்டிருக்கினம்... தனியொருவன் துணியிறதாலையோ, தனியொருவனைக் கொலை செய்யிறதாலையோ இந்தச் சமுதாயத்தை மாற்றிவிடலாம் எண்டுமட்டும் நினைக்காதை..

.. நீ இப்ப கொலைகாரன்...

ஆனுல்

எதிர்காலத்தில் நீயே ஒரு .. ......

அன்ரனி மாஸ்டர் தன் பேச்சை முடிக்கின்ருர்

உக்குள் புறப்படுகின்ருன்...

சிறைக்கதவுகள் அவனுக்காகத் திறந்து கிடக்கின்றன!

# ரா வெளியீடுகள்

ஈழத்தில் மலர்ந்திருக்கும்
உங்கள் அபிமான எழுத்தாளர்களின்
உயிரோட்டமான நாவல்கள்

மழைக் காலம்

ராதையின் நெஞ்சம்

பூம்பனி மலர்கள்

முடிவல்ல ஆரம்பம்

## மீரா நாவல்கள்

மண்ணின் தாகம்

கானகத்தின் கானம்

இருள் இரவில் அல்ல

பேசாத கோபுரங்கள்

பூஜைக்காக வாழும் பூவை



மீரா வெளியீடுகளை வாங்கி

ஈழத்து வெளியீட்டுத் துறைக்கு

கை கொடுங்கள்.